விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 23
ஒலி 308 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 06 ஞாயிற்றுக்கிழமை (23.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### வலி வடக்கு பலாலி வள்ளுவர்புரத்தில்
# சிறுமியின் சங்கிலி அபகரித்தவர் மக்களால் மடக்கிப் பிடிப்பு
## விசாரணையில் இராணுவச் சிப்பாய் என அடையாளம் காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)
பலாலி வள்ளுவர்புரத்தில் வீதியில் சென்ற சிறுமியின் சங்கிலியை அபகரித்துத் தப் பித்தவர் பொதுமக் களினால் மடக்கிப் 19

# வாகனங்களின் விலை தொடர்ந்து குறையும்
### வாகன இறக்குமதியாளர்கள் சங்கம்

(கொழும்பு)
வாகனங்களின் விலை தொடர்ந்து குறைவடையும் என வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
வாகன இற்க்குமதி நிறுத் தப்பட்டுள்ளமையால், இலங்கை யில் பயன்படுத்தப்படும் வாகனங் கள் மாத்திரமே எஞ்சியுள்ளதாக அந்த சங்கத்தின் உறுப்பினர் நாமல் ஹேவாவி தாரண தெரிவித்துள் 19

# 22 ஆவது திருத்தம் 21 ஆக மாறியது
## நீதி அமைச்சர் விஜயதாச



(கொழும்பு)
பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தின் பெயரை 21 ஆவது திருத்தம் என மாற்றுவதற்கு குழுநிலையின்போது தீர்மானம் கொண்டு வரப்பட்டதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (19 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய முறையில்
## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

(கொழும்பு)
நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையை நடத்தும் முறைமையில் மாற்றம் செய்யப்பட்டுள் ளதாக பரீட்சைகள் ஆணையாளர் எல். எம்.டி.தர்மசேன தெரிவித்துள்ளார். 19

# பட்டாசு பொருட்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)
இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பட்டாசு பொருட்களின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த ஆண்டு 80 ரூபாய்க்கு விற்கப்பட்ட சிறிய பட்டாசு பொதி இந்த பண்டிகை காலத்தில் 180 முதல் 200 ரூபாய் வரை விற்க வேண்டிய நிலை 19

### பொது மன்னிப்பு வழங்கப்பட்டவர்களில்
# 4 தமிழ் அரசியல் கைதிகளே விடுதலை

(யாழ்ப்பாணம்)
பயங்கரவாதத் தடைச் சட்டத் தின்கீழ் நீண்டகாலமாகத் தடு த்துவைக்கப்பட்டிருந்த 8 தமிழ் அரசியல்கைதிகளுக்கு ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க வினால் பொதுமன்னிப்பு வழங் கப்பட்டிருப்பதாக கடந்த வாரம் அறிவிக்கப்பட்ட நிலை யில், அவர்களில் நால் 19

# தீபாவளியன்று மின்வெட்டு இல்லை

(கொழும்பு)
எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை தீபாவளி பண் டிகையை முன்னி ட்டு நாட்டில் மின் 19

# நட்சத்திர ஹோட்டல்களில் உணவெடுக்க வேண்டாம்
## அரச நிறுவன தலைவர்களுக்கு ரணில் அரசு கடுமையான கட்டளை

(கொழும்பு)
கூட்டங்கள் மற்றும் விழாக் களுக்கு நட்சத்திர ஹோட்டல் களில் இருந்து உணவுகளை கொண்டுவர வேண்டாம் என அரச நிறுவனங்களின் தலை வர்களுக்கு அரசாங்கம் அறிவு றுத்தியுள்ளது.
- நட்சத்திர ஹோட் டல்களில் சாப்பிடுவது 19

அன்பான வாடிக்கையாளருக்கு
மகிழ்ச்சியான செய்தி
உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
சில வருட காலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்றுமுதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
மொத்தக் கொள்வனவிற்கு கழிவு 10%
சரவணபவன் பான்ஸி ஹவுஸ்
இல. 26/1, ஜூம்மா பள்ளிவாசல் லேன், (செம்மா தெரு ஒழுங்கை) யாழ்ப்பாணம்.
கொழும்பு விலையில் யாழ்.நகரில்

பான்ஸிப் பொருட்கள், சில்வர் பொருட்கள், பை (Bag) வகைகள், கிளாஸ் வகைகள், மாபிள் வகைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், பாதணி வகைகள், முகக் கவசங்கள் (Mask), அன்பளிப்புப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூடுகள், குடை, மழைக்கவசங்கள், தையல் உபகரணங்கள், பாடசாலைப் பொருட்கள், கவரிங் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்
உரிமையாளர் - தே. கலைத்தாசன் (கரன்)
021 315 5900, 077 468 3354
(13107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603,**
**076 097 3127**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்
மருந்தாளர்களாக கடமையாற்றும்
திருமதி **வி. தர்சினி** அவர்களின் பாசமிகு தந்தையும்
திரு. **விஜிகரன்** அவர்களின் அன்பு மாமனாருமான

**அமரர். சுப்பிரமணியம்**
**பொன்னம்பலம்**

(முன்னைநாள் புகையிரத திணைக்கள உத்தியோகத்தர் - அனுராதபுரம்)

அவர்கள் கடந்த 16.10.2022 அன்று இறைபதம்
அடைந்துவிட்டார். அன்னாரின் மறைவிற்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(13229)

**யாழ்.போதனா வைத்தியசாலை மருந்தாளர்கள்**

---

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்
மருந்தாளராகக் கடமையாற்றும்
**இ.ரஜீவ்** அவர்களின் பாசமிகு மகள்

அமரர் **ரஜீவ் ரட்சாயகி**

அவர்கள் 21.10.2022 அன்று இறைபதம்
அடைந்துவிட்டார். அன்னாரின்
மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தி
னருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயருடன்:-
**நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்நுட்ப
வல்லுனர்களின் ஒன்றியம் - யாழ்ப்பாணம்.**

(13228)

---

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்
மருந்தாளராகக் கடமையாற்றும் **இ.ரஜீவ்** அவர்களின்
பாசமிகு மகள்

**அமரர் ரஜீவ் ரட்சாயகி**

அவர்கள் 21.10.2022 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13227)

**மருந்தாளர்கள் - யாழ்.போதனா வைத்தியசாலை**

---



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு - **ஜெயம்**

**077 814 7389, 077 986 5457**

(13235)


---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



மனம் மகிழ 29 - 12 - 1934

மனம் நெகிழ 25 - 09 - 2022

அமரர் **முருகுப்பிள்ளை**
**சின்னத்துரை (சிவப்பிரகாசம்)**
**(குகன் குடிசை)**

25.09.2022 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் **25.10.2022** செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியளவில் அன்னாரது இல்லத்தில் "குகன் குடிசையில்" நடைபெற்று பொலிகண்டி சமுத்திரத் தீர்த்தத்தில் அஸ்தி கரைக்கப்படும். அன்றைய தினம் மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுச் சபிண்டீகரண கிருத்திய நிகழ்வில் கலந்து அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அமரரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் பல வழிகளில் எமக்கு உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை இத்தால் அறியத் தருகின்றோம்.

**(இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)**

**"குகன் குடிசை",
பொலிகண்டி**

**குடும்பத்தினர்**

(C-5132)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் தலைமுறையினர் மத்தியில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பு

## இந்த வருடத்தில் இதுவரை 53 பேர் அடையாளம்

### மருத்துவர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவிப்பு

(கொழும்பு)

**இளம் தலைமுறையினர் மத்தியில் எச்.ஐ.வி வைரஸ் பரவுவது அதிகரித்துள்ளதாக பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் நோய்த் தடுப்பு தொடர்பான தேசிய வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

இந்த வருடத்தில் முடிவடைந்த காலப்பகுதியில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளான 53 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்கள் 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இளம் தலைமுறையினர் மத்தியில் எச்.ஐ.வி தொற்றாளர்கள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. 2021ஆம் ஆண்டு 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட 25 எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இந்த ஆண்டு 53 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகரிக்கும் இணைய பாவனையே காரணம் என நாங்கள் நினைக்கிறோம்.

ஆண் பிள்ளைகளே இதில் அதிகம். 2022 ஆம் ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளில் 30 இளம் ஆண் பிள்ளைகள் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி மாவட்டங்களிலேயே அதிகளவான எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# உணவுப் பணவீக்கம் அதிகரிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவிப்பு


(கொழும்பு)

செப்டெம்பர் மாதத்துக்கான பணவீக்கம் 73.2% ஆக அதிகரித்துள்ளதாக மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஒகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 70.2% ஆக இருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒகஸ்ட் மாதத்தில் 84.6% ஆக இருந்த உணவுப் பணவீக்கம் செப்டெம்பர் மாதத்தில் 85.8% ஆக பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# கட்டணம் செலுத்தப்படாமல் 40 நாட்களாக காத்திருக்கும் மசகு எண்ணெய் கப்பல்



(கொழும்பு)

கொழும்பில் நங்கூரமிடப்பட்டுள்ள 1 இலட்சம் மெற்றிக்தொன் மசகு எண்ணெய் அடங்கிய கப்பலுக்கு இதுவரை கட்டணம் செலுத்தப்படவில்லை என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

40 நாட்களுக்கும் அதிகமான காலம் குறித்த கப்பல் நாட்டின் கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டுள்ள நிலையில் சபுகஸ்கந்த எரிபொருள் நிலையமும் மசகு எண்ணெய் பற்றாக்குறை காரணமாக மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மக்களுடன் கலந்தாலோசிக்காமல் முடிவெடுக்கும் இலங்கை அரசு

## இந்த நிலை மாற வேண்டும் என்கிறார் உலக வங்கியின் முன்னாள் அதிகாரி

(கொழும்பு)

மிகவேகமாக அதிகரிக்கும் பணவீக்கம் காரணமாக பொதுமக்கள் முன்னொரு போதும் இல்லாத நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள போதிலும் வரி அதிகரிப்பு போன்றவற்றின் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கான துணிச்சலான நடவடிக்கைகளை இலங்கை எடுத்துள்ள அதேவேளை வரிகள் தொடர்பான முக்கிய தீர்மானங்களை மூடிய கதவுகளின் பின்னால் எடுக்கும் பாரிய தவறை கொள்கை வகுப்பாளர்கள் தொடர்ந்தும் செய்கின்றனர் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மக்கள் மற்றும் நிறுவனங்களே வரிவிதிப்பிற்கு உள்ளாகின்றனர் என்பதால் தீர்மானங்களை எடுக்கும் நடவடிக்கைகளில் அவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்வது மிகவும் அவசியம் என கலாநிதி. எஸ்.தேவராஜன் தெரிவித்துள்ளார்.

வரி தொடர்பான விடயங்கள் மக்களால் புரிந்து கொள்ள முடியாத விடயங்கள் என கருதுவதை அரசாங்கம் கைவிட வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளும் வரிகள் தொடர்பான நவீனமான விடயங்களை பொதுமக்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் இதன் காரணமாக வரிகள் தொடர்பான விடயங்களை மூடிய கதவுகளின் பின்னால் எடுக்க வேண்டும் எனக் கருதுகின்றனர்.

வரிக்கொள்கை அல்லது வரிச்செலவுதிட்டக் கொள்கை என்பது ரொக்கட் விஞ்ஞானமில்லை. இது மிகவும் விளங்கிக் கொள்ளக்கூடிய விடயம். இது பொருளியல் நிபுணர்கள் மாத்திரம் புரிந்துகொள்ளக்கூடிய விடயம் என்ற கருத்து காணப்படுகின்றது. பொருளாதார நிபுணர்கள் மாத்திரம் கையாள வேண்டும் என்ற கருத்தும் காணப்படுகின்றது. இது புரிந்து கொள்ளக் கூடிய விடயம். மக்கள் வரிக் கொள்கைகள் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் இது வாழ்க்கையை பாதிக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

திறமையின்மை அல்லது போதிய ஆலோசகர்கள் இன்மை என்பது இலங்கைக்கு பிரச்சினை இல்லை. போதியளவு பொறுப்புக்கூறல் இன்மையே பிரச்சினை என உலக வங்கியின் முன்னாள் அதிகாரியான தேவராஜன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை கலந்தாலோசிக்காமல் தீர்மானங்களை எடுக்கலாம் என அரசாங்கம் சிந்திக்கின்றது இதுவே பிரச்சினை. இலங்கையில் தலைகீழாக மாற்ற வேண்டிய விடயம் இதுதான். பல தசாப்தங்களாக நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தி வரும் விடயமாக இது காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமை ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி- கரு



(கொழும்பு)

22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமை ஜனநாயகத்தை மதிக்கும் அனைத்து குடிமக்களுக்கும் ஒரு தனித்துவமான சாதனை என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சர்வாதிகார ஆட்சிக்கு வழி வகுக்கும் வகையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை செல்லுபடியற்றதாக்கிய அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஜனநாயகத் தைப் பாதுகாப்பதற்கும் மக்களின் கண்ணியம் மற்றும் எதிர்பார்ப்புகளை உறுதிப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட இந்த முயற்சி புதிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை உறுதிப் படுத்தப் பட்டிருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டை சர்வாதிகார ஆட்சிக்கு இட்டுச் செல்லும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லதொழிக்கவும் பாரிய ஊழலை நாட்டிலிருந்து விலக்கவும் நீதிக் கான தேசிய இயக்க எதிர் காலத்தில் முன்னின்று செயற்படும் என்றும் கருஜயசூரிய தெரிவித்துள்ளார். (நி)

# ஆடை ஏற்றுமதியில் பாரிய வளர்ச்சி இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி 20.8 சதவீத வளர்ச்சியை கண்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களின்படி, 2022 ஆம் ஆண்டு ஜனவரி - ஒகஸ்ட் மாதங்களில் ஆடை ஏற்றுமதி 3,773.1 மில்லியன் அமெரிக்க டொலர் களாக இருந்தது. முந்தைய ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 3,122.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்துள்ளது.

இதே காலகட்டத்தில் வருடாந்த புடவை ஏற்றுமதி 5.9 சதவீதம் அதிகரித்து 240.9 மில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி)


**வீடு வாடகைக்கு**

யாழ்.கச்சேரி, பெரியாஸ்பத்திரி, பஸ் நிலையம், புகையிரத நிலையம், பிரபல பாடசாலைகள் என்பவற்றிற்கு மிக அருகாமையில் கோவில் வீதி, யாழ்ப்பாணம் விலாசத்தில் அமைந்துள்ள வீட்டின் ஒரு பகுதி (ANNEX) இணைந்த குளியலறை, HALL, KITCHEN என்பவற்றுடன் வாடகைக்கு உண்டு. (C-1827)

தொடர்புகளுக்கு- 071 450 1490



**மணமகன்(Male) தேவை**

யாழ்.வடமராட்சி இந்து கௌரவக் குடும்பம். வசிப்பிடம் கொழும்பு. வயது 25(+). அத்தம், 4 ல் செவ்வாய் நல்ல தொழில் பார்க்கும் கொழும்பைச் சேர்ந்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.தரகர் வேண்டாம்.

075 0583 396



**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவக் குடும்பம் 1979 கார்த்திகை, குறுகிய கால விவாகரத்து பெற்ற கணனியியல் கலாநிதிக்கு படித்த பண்புள்ள மணமகள் தேவை. யாழ்ப்பாண தொடர்புடையவர்கள் மட்டும். (C-1825)

தொடர்பு- 077 6565 258


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்கள் 18.10.2022-16.11.2022

## சிம்மம்

**வேகத்தோடு விவேகமும் கொண்டு செயற்படும் சிம்ம இராசி வாசகர்களே!**

சுக்கிரன் மாத தொடக்கத்திலேயே சூரியனுடன் இணைந்து "நீசபங்க ராஜயோகத்தை" உருவாக்குகிறார். இதனால் நல்ல மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து சேரும். தொழில் வளர்ச்சிசிறப்பாக இருக்கும்.

**துலாம் - சுக்கிரன் சஞ்சாரம்**

சுக்கிரன், 3 ஆம் இடத்திலேயே சஞ்சரிப்பது யோகம்தான். வெற்றிகளின் ஸ்தானாதிபதி சுக்கிரன் என்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை கொடுத்தவர்கள் விலகுவர். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். பணியில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் பக்கபலமாக இருப்பர்.

**துலாம் - புதன் சஞ்சாரம்**

புதன், சகாய ஸ்தானத்தில் சகாய ஸ்தானாதிபதி சுக்கிரனோடு இணைந்திருப்பது மிகமிக அற்புத மான நேரமாகும். தொழில் முன்னேற்றம், கொடுக்கல்- வாங்கல் களில் அதிக இலாபம், சுப செய்திகள் வரும் சூழ்நிலை அமையும் நேரம் இது. உத்தியோகத்தில் உள்ள வர்களுக்கு வெளிநாட்டில் உள்ள பிரபல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். தன லாபாதிபதி புதன் பலம்பெறும் இந்த நேரத்தில் அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். பெண்பிள்ளைகளின் கல்யாண சீர்வரிசைகளையும் வாங்கி மகிழ்வீர்கள்.

**மிதுன-செவ்வாய் வக்கிரம்**

ஐப்பசி 18 ஆம் திகதி செவ்வாய் வக்கிரம் பெறுகிறார். உங்களுக்கு யோகம் செய்யும் கிரகம் வக்கிரம் பெறுவதாலும் அவர் லாப ஸ்தானத்தில் இருப்பதாலும் சொத்து விற்பனையால் இலாபம் உண்டு. சொந்தங்களையும் சுற்றி இருப்பவர் களையும் பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. திடீர் இடமாற்றம், வீடுமாற்றம் வரலாம். சுபசெலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிக - புதன் சஞ்சாரம்**

புதன், சுக ஸ்தானத்திற்கு வரும் போது பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். தேங்கி இருந்த காரியங்கள் துரிதமாக நடைபெறும். புதிய கட்டடம் கட்டிக் குடியேறும் யோகம் உண்டு.

**விருச்சிக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 26 ஆம் திகதி, சுக்கிரன், 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் முன்னேற்றம் உண்டு. துணிவும் தன்னம்பிக் கையும் கூடும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

## கன்னி

**உதவி செய்வதால் பிறர் உள்ளத்தில் இடம் பிடிக்கும் கன்னி இராசி வாசகர்களே!**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் உச்சம் பெற்றிருக்கிறார். குருவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிகிறது. எனவே ஆரோக்கியம் சீராகும். அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

**துலாம் - சுக்கிரன் சஞ்சாரம்**

சுக்கிரன், பலம்பெறும் போது எடுக்கும் புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வேலைக்கேற்ற ஊதியம் கிடைக்காத இடத்தில் பணியாற்றி வந்தவர்களுக்கு இப்போது நல்ல இடத்தில் நல்ல சம்பளத்துடன் வேலை அமையும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். இல்லத்தில் நடைபெற வேண்டிய சுப காரியங்கள் நடைபெற வழிபிறக்கும்.

**துலாம் - புதன் சஞ்சாரம்**

புதன் ஐப்பசி 6 ஆம் திகதி சூரியன், சுக்கிரனோடு இணைந்திருக்கும் இந்த நேரம் அற்புதமான நேரமாகும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக அல்லது கல்யாணம் சம்பந்தமாக நீங்கள் எடுக்கும் முயற்சி கைகூடும். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வருமான பற்றாக்குறை அகலும்.

**மிதுன - செவ்வாய் வக்கிரம்**

ஐப்பசி 18 ஆம் திகதி, செவ்வாய் வக்கிரம் பெறுவது நன்மை தான். இழப்பு களை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வரும். சகோதரர்களோடு இருந்த மனப்போராட்டங்கள் அகலும். புதிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். இடமாற்றம், வீடு மாற்றம் எளிதில் அமையும். வழக்குகள் சாதகமாக முடியும். செவ்வாய் சனியைப் பார்ப்பதால் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

**விருச்சிக - புதன் சஞ்சாரம்**


புதன், சகாய ஸ்தானத்திற்கு வரும் போது தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் தொடங்க எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டு. உற்றார்,உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள். தற்காலிகப் பணியில் இருப்பவர்களுக்கு நிரந்தரப் பணி அமையும்.

**விருச்சிக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 26 ஆம் திகதி, சுக்கிரன், சகாய ஸ்தானத்திற்கு வரும் போது பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். பழைய ஆபரணங்களைக் கொடுத்துப் புதிய ஆபரணங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்திணைவர். வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

(தொடரும்)

# மரண அறிவித்தல்



## அருளானந்தம் லூக் அன்ரன்

**தோற்றம் : 1981.09.18 மறைவு : 2022.10.11**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் லூக் அன்ரன் அவர்கள் கடந்த 11.10.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தம் - லூக் மலர் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குலசிங்கம் - மகாலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் தாரணியின் அன்புக் கணவரும் அஸ்வா, அஸ்விதா ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தகுமார் (லண்டன்), தவராஜன் (தவம் Travels), கோபாலசிங்கம், நிமலராஜ் ஆகியோரின் மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (24.10.2022) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 413 2033

தகவல் :- குடும்பத்தினர்

(C-5134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் துன்புறுத்தல்கள் தொடர்பாக

# 8 மாத காலப் பகுதியில் 7,568 முறைப்பாடுகள்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

**சிறுவர் துன்புறுத்தல்கள் தொடர்பில், கடந்த 8 மாத காலப் பகுதியில் 7,568 முறைப் பாடுகள் பதிவாகியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.**

அவற்றுள் அதிகமான முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

சிறுவர்கள் மீதான தாக்குதல்கள், துஷ்பிரயோகங்கள், தொழிலாளியாக பயன்படுத்தல் மற்றும் யாசகத்தில் ஈடுபடுத்தல் என்பன தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார். கம்பஹா, குருநாகல், அநுராதபுரம், கண்டி, இரத்தினபுரி மற்றும் மாத்தறை முதலான மாவட்டங்களிலும், சிறுவர்கள் தொடர்பாக கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர் துன்புறுத்தல் குறித்து, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின், 1929 என்ற இலக்கத்தை அழைத்து முறைப்பாடளிக்க முடியும்.

சிறுவர்கள் மீதான துன்புறுத்தல்கள் குறித்து, அவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# அடுத்த வருட முற்பகுதியில் ஐ.எம்.எப் இடமிருந்து கடன்

## வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை



(கொழும்பு)

அடுத்த வருட முற்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதலாவது கடன் தவணையை பெற்றுக்கொள்ள முடியும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தமது குழு வோஷிங்டனுக்கு சென்றபோது சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து சகல கடன் வழங்குநர்களையும் அழைத்து கலந்துரையாடியதாக கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட முதற்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து எமக்கு முதலாவது கடன் தவணையை பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (நி)

# நவம்பர் மாதம் முதல் தனிநபர் வருமான வரி

(கொழும்பு)

தனிநபர் வருமான வரி நவம்பர் 1 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

அதன்படி மாத வருமானம் பெறுபவர் ரூ. 100,000 அல்லது அதற்கு மேல் வருமான வரி செலுத்த வேண்டியிருப்பதோடு உயர்ந்த தனிநபர் வருமான வரி விகிதம் 36% உயர்ந்துள்ளது. (நி)

# பொருட் கொள்வனவிற்கான மட்டுப்பாடு நீக்கம்

## சதொச நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

சதொசவில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது, சிவப்பு சீனி தவிர்ந்த ஏனைய அனைத்து பொருட்களுக்கும் விதிக்கப்பட்டிருந்த மட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

சிவப்பு சீனிக்காக விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாட்டை அடுத்த வாரத்தில் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

சதொசவில் கடந்த தினம் சில பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சீரற்ற காலநிலையால் சுமார் 5,000 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலையால் 1,296 குடும்பங்களைச் சேர்ந்த 4,929 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பல மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 31 குடும்பங்களைச் சேர்ந்த 116 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. (நி)

# பதவி விலகலை அறிவித்த ஹரின்

(கொழும்பு)

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக பதவி வகிக்கும் சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தான் சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து விலக தீர்மானித்துள்ள தாக தெரிவித்தார்.

எனவே இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்கவை நியமிக்க அந்த கட்சியின் முகாமைத்துவ சபை தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கட்சியின் முகாமைத்துவ சபைக்கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (நி)


# இராசிபலன்

23.10.2022
ஐப்பசி 06, ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி பிற்பகல் 5.50 மணிவரை


உத்தரம் பிற்பகல் 2.58 மணிவரை
சுபநேரம் - 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் -4.32-6.02 மணிவரை

சந்திராஷ்டமம்
சதயம், பூரட்டாதி

வளவன்





மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள்.




பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக கண்ணனை வழிபட வேண்டிய நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.




யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.




கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், முயற்சிகள் வெற்றி தரும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.





புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




புதிய அனுபவங்கள் ஏற்படலாம், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.





நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், முன்னேற்றம் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.





எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




குடும்ப ஒற்றுமை கூடும் நாள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.




குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்புண்டு.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக்கும், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.




நீண்ட நாளைய விருப்பங்கள நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

வார்த்தைகள் முக்கியமல்ல, அர்த்தங்கள் தான் முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத் தொழில்நுட்ப பீடத்தின் சர்வதேச ஆய்வு மாநாடு



(யாழ்ப்பாணம்)

புதிய இயல்பு நிலையில் எதிர்காலத்தைச் செழுமைப்படுத்தல் என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரில், தொழில்நுட்ப பீடத்தினால் நடத்தப்பட்ட "தொழில்நுட்ப முன்னேற்றமும் புத்தாக்கமும்" என்ற தலைப்பிலான ஆய்வு மாநாடு நேற்று முன்தினம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி, அறிவியல் நகரில் அமைந்துள்ள தொழில்நுட்ப பீட மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொழில்நுட்ப பீடத்தின் ஆய்வுத் தலைவரும் பீடாதிபதியுமான பேராசிரியர் சிவமதி சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆய்வு மாநாட்டில் பல்கலைக்கழக ஆய்வுத் தலைவரும் துணைவேந்தருமான பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, 2022 ஆய்வு மாநாட்டின் வழிப்படுத்துநர் கலாநிதி. எஸ். கௌதமன், ஆய்வு வெளியீடுகளின் மாநாட்டின் பிரதம ஆசிரியர் பொறியியலாளர் டி.எச். டீ.ஏ.ஈ. ஜெயசிங்க, மாநாட்டின் இணைச் செயலாளர் கலாநிதி. டி.எச்.கே நவரட்ண ஆகியோர் பங்கு பற்றினர். (நி)

# கரணவாய் தெற்கிலுள்ள மயானத்தை சீர்செய்ய கோரிக்கை



(கரணவாய்)

கரணவாய் தெற்கில் அமைந்துள்ள இந்து மயானம் பற்றைகளால் நிரம்பு காடாக காட்சி அளிக்கின்றது.

மயானத்தில் அமைந்துள்ள கொட்டகைதகரங்கள் சீரற்று உள்ளன.

நான்கு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இந்த இந்து மயானத்தை தகனம் செய்வதற்காக உபயோகிக்கிறார்கள்.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மயானத்தை பார்வையிட்டு சீர்செய்து தருமாறு அக் கிராமத்திலுள்ள பொது மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (நி-90)

# சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் தீபாவளித் திருநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தீபாவளித் திருநாள்-2022 நிகழ்வானது நாளை பிற்பகல் 3 மணிக்கு வைச வித்தியா விருத்திச் சங்க ஆராதனை மண்டபத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சோ. பத்மநாதனின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி செ.கண்ணதாசன் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (நி)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபை புத்தூர் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வீட்டு நூலகம் மற்றும் வீட்டுத்தோட்டம் வைத்திருப்போரை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

எனவே புத்தூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பங்குபற்ற விரும்புவோர் 30.10.2022 ஆம் திகதிக்கு முன்னர் நூலகர், பொது நூலகம் புத்தூர் என்ற முகவரிக்கு தங்கள் முகவரி, முழுப் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் நேரில் வருகை தந்தோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்குமாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவித்துள்ளார். (நி)

# யாழ்.வணிகர் கழகத்தின் புதிய நிர்வாகத்தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகள் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.இதன்போது யாழ். வணிகர் கழகத்தின் தலைவராக இ.ஜெயசேகரன், உபதலைவராக இ.ஜனக்குமார், செயலாளராக சி.கேசவன், உப செயலாளராக ந.ஜெகமோகன், பொருளாளராக செ.கஜன் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதுடன் மேலும் 16 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (நி)

# 'சூழலியல் புத்தகங்கள்' அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொது நூலகம் மற்றும் சிறகுகள் அமையம் இணைந்து நடத்தும் சூழலியல் புத்தகங்கள் அறிமுகமும் உரையாடலும் நிகழ்வு இன்று ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு கொக்குவில் பொது நூலகத்தில் இடம்பெறும்.

தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏ.எம். றியாஸ் அகமட்டின் ஒருங்கிணைந்த பசுமையாக்க முறைகள் எனும் தலைப்பிலான சிறப்பு கருத்துப்பகிர்வு உரையாடலும் நிகழ்த்தப்படவுள்ளது. (நி)

# வீதியை புனரமைக்குமாறு நெல்லியடி மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

சீரற்ற காலநிலையால் நெல்லியடி புதிய சந்தைப்பகுதியில் வெள்ளம் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்கிறது.

இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதியை புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-60)



யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் நேற்று வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் திறந்தவெளி முத்து அரங்கில் நடைபெற்றது.

# தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை குளத்தடி திருவருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கேதார கௌரி பூசை வழிபாடுகளும் காப்பு அணியும் வைபவமும் நடைபெறும்.

இத்தினத்தில் செந்நாப் புலவர் மதுரகவி காரை.எம்.பி அருளானந்தனின் 'கேதார கௌரி விரத மகத்துவம்' எனும் தெய்வீகப் பேருரை இடம் பெறும். (நி)



யாழ். நல்லூர் கோட்டத்திற்குட்பட்ட கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் மாணவ முதல்வர்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் உப அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

(படம்:கஜிந்தன்)

# யாழில் இடம்பெற்ற மாபெரும் தொழிற்சந்தை







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட செயலகமும் மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களமும் இணைந்து நேற்று மாபெரும் தொழிற்சந்தை ஒன்றினை நடத்தினர். யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் இந்த மாபெரும் தொழிற்சந்தை திறந்து வைக்கப்பட்டது. (நி-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 367
Viber 076 636 3378


# பிரித்தானிய பிரதமரின் பதவி விலகலும் பிரிவினைவாதிகளின் பதவி மோகமும்

அபிமன்யு

**"அங்கு: நாட்டு மக்களின் நலன்கருதி எனது பதவியிலிருந்து விலகிக் கொள்கிறேன் என அறிவித்திருக்கிறார் பிரித்தானிய பிரதமர். இங்கு: நாடும் மக்களும் எக்கேடு கெட்டுப்போனாலென்ன ஆட்சியைக் கைப்பற்றியே தீருவோம் என்கிறார்கள்..."**

ஒரு நாட்டில் அரசாங்கத்துக்கெதிராக பாரிய மக்கள் போராட்டம் ஒன்று 'நடந்து கொண்டிருக்கிறது.

படித்தவர், பாமரர் என அனைத்துத் தரப்பினரும் அந்த மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் பங்கெடுக்கின்றனர்.

அதில் ஒரு நடுத்தர வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் ஒருவர் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கிறார்.

கறுத்த தேகம், காவி படிந்த பற்கள், அழுக்கு நிறைந்த உடை அவனை ஒரு அன்றாடம் பிழைப்பு நடத்தும் கூலித்தொழிலாளி என்பதை சுட்டிநின்றது.

அவன் ஒரு தடி ஒன்றில் இரண்டு இறாத்தல் பாணை குத்தி அதைப் போராட்டக்காரர்களின் எதிர்பினால் எழுந்த நெருப்பில் சுட்டுப் பொசுக்குகிறான்.

கரும்புகை கொண்ட அந்த நெருப்பில் அந்தப் பாண் கருகி




முறுக்கேறுகிறது.

அதை அவன் தன் தடித்த கைகளால் பிய்த்து வாயில் போட்டுக் கொள்கிறான். அந்த சாமானியனின் தலையில் கறுப்பு நிறத்தில் வெள்ளை எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட வாசகம் எழுதப்பட்டிருந்தது. அவன் ஏதோ ஒரு வார்த்தையை அடிக்கடி உரத்து கூறிய படியே இருந்தான்.

ஆம், அவன் தலைப்பட்டியில் எழுதப்பட்ட வாசகமும் அவன் வாயில் உச்சரித்துக் கொண்டிருந்த வாசகமும் ஒன்று.

அதுதான் "கோ கோம் கோட்ட" என்ற வாசகம். இந் நிகழ்வு வேறு எங்கும் நடைபெறவில்லை. இலங்கைத் திருநாட்டில் தான் நடைபெற்றிருக்கிறது.

யாரை தங்கள் மீட்பர் என்று பாற்சோறு 'பொங்கி கொண்டாடினரோ அவர்களை பதவியை விட்டு விலகச் சொல்லி வீதிகளில் ரயர் கொழுத்தி கரும்புகை கக்கி தம் எதிர்ப்பை தெரிவித்துக் கொண்டிருந்தனர் பெரும்பான்மை சிங்கள மக்கள்.

ஏழைகளின் உணவு என வர்ணிக்கப்படும் பாணை அந்தக் கரும்புகையில் வாட்டி தம் வயிற்றில் அடித்ததை வசைபாடிக்கொண்டிருந்தனர் பெரும்பான்மை சிங்கள மக்கள்.

அதன் பின்பு நாட்டில் நடந்தவற்றை இங்கு கூறித்தான் தெரிய வேண்டியதில்லை. ஆயினும் இன்று வரை ஆர்ப்பாட்டக்காரர் களைத் தேடித் தேடி கைது செய்து கொண்டிருக்கிறார்கள் பொலிஸார்.

பதவி விலகல்கள் சுயமான தாய் ஏற்படவில்லை. பதவி விலக வைத்தவர்கள் பொது மக்களே என்பது யாவரும் அறிந்த விடயமே.

இங்கு தான் நாம் ஒரு விடயத்தை சிந்திக்க வேண்டும். கடந்த வியாழக்கிழமை பிரித்தானியாவின் பிரதமர் லிஸ்ட்ரஸ் தனது பதவியிலிருந்து விலகிக் கொள்வதாக மன்னன் மூன்றாவது சார்லஸ்க்கு அறிவித்திருப்பதாக அவர் பொது மக்களுக்குத் தெரிவித்திருக்கின்றார்.

பாரிய நெருக்கடிகளும் சர்வதேச நெருக்கடிகளுக்கும் மத்தியிலேயே தாம் பிரித்தானியாவின் பிரதமர் பதவி ஏற்றதாகவும் தற்போதுள்ள நிலையில் அவற்றை என்னால் சமாளிக்க முடியாது. என்னால் பெரும்பான்மை ஆதரவைப் பெற முடியாது எனவும் அதனால் தான் பிரித்தானியாவின் பிரதமர் பதவியிலுருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

பிரித்தானியாவின் பிரதமர் லிஸ்ட்ரஸ் பிரித்தானியாவின் பொருளாதார சரிவுக்குத் தான் காரணமாக இருந்துவிடக் கூடாது என்ற நல்ல நோக்கத்துடன் தனது பதவியைத் துறந்திருக்கிறார்.

ஆனால் எமது நாட்டிலோ மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் தாம் எவ்வாறு மீண்டும் ஆட்சி அதிகாரங்களைப் பிடிக்க முடியும் என்று மந்திராலோசனை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷக்களே காரணம் என்ற மக்களின் முடிவு அவர்களைப் பதவி விலக வைத்தது.

ஆனால் மீண்டும் ராஜபக்ஷக்களை ஆட்சிக்கு கொண்டுவர பாரிய பிரயத்தனம் - தென்பகுதியில் நடந்து கொண்டு இருக்கிறது.

ராஜபக்ஷக்களுக்கு மக்கள் நெருக்கடிகளைக் கொடுத்த போதும் அதைச் சமாளித்து நாட்டின் பொறுப்பை ஏற்றவர் ரணில் விக்கிரமசிங்க.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜனபெரமுன பூரண ஆதரவு வழங்கியிருந்தாலும் தற்போது அது முழுமையாக உண்டா என்றால் அது கேள்விக்குறியே. அண்மையில் நிகழ்வொன்றில் பேசிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுஜனபெரமுனவின் தயவிலேயே ரணில் இளைப்பாறுகின்றார் என்றவாறு ரணிலைச் சாடியிருப்பது மகிந்தவின் மீள் எழுச்சியின் விருப்பத்தை தெளிவாகக் காட்டியிருக்கிறது.

மகிந்த இவ்வாறு கூறி இரண்டு நாட்களில் அதற்குப் பதிலடி கொடுப்பது போல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு விடயத்தைக் கூறியிருந்தார்.

அதாவது ஏற்கனவே பதவியிலிருந்தவர்களின் தவறான அரசியல், பொருளாதார கொள்கையே நாட்டின் இந்த நிலைமைக்கு காரணம் என்று.

இதன் மூலம் ராஜபக்ஷக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சாடியிருப்பதை உணர முடிகின்றது.

இதன்மூலம் இரு தரப்பினரும் மறைமுக வார்த்தைப் போரில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது புலப்படுகிறது.

நாட்டின் மக்களின் நலன் கருதி தன் பதவியை இராஜினாமாச் செய்த பிரித்தானியாவின் பிரதமர் லிஸ் டிரஸ் ஒரு புறம்.

நாட்டில் பொருளாதாரச் சிக்கல்களுக்கு காரணமானவர்களுக்கு எதிராக மக்கள் போரிட்டு பதவி விலக வைத்ததன் பின்னரும் ஆட்சி அதிகாரத்துக்கு ஆசைப்படும் நம் நாட்டு அரசியல் தலைவர்கள் மறுபுறம்.

இதில் எது நியாமானது என்பதை மக்கள் நன்கு அறிவர். நாட்டில் ஒருவேளை உணவுக்கே அல்லல்படும் மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டு போகிறது என்கிறது ஆய்வு.

ஆய்வென்ன ஆய்வு. நாம் அதிகாரத்திற்குப் பாய்வோம் என்ற தரப்புகளுக்கு மக்கள் நலன் பற்றி புரியவா போகிறது.

ஆக; இனியொரு மக்கள் எழுச்சி வெடிக்கும் சந்தர்ப்பம் ஏற்படுமாக இருந்தால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்ற உண்மையை ஆட்சி பீடம் ஏறத்துடிக்கும் தரப்புகள் உணர்ந்து கொண்டால் சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் விதானையார் விசுவலிங்கத்தைத் தவிர ஏனையோர் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர். என்ன இண்டைக்கு விதானையாரைக் காணவில்லை. என்ன சங்கதியோ, மூப்பர் விசாரித்தார்.

**கங்காணி:** மழை பெய்ததால வீட்டுக்குள்ள வெள்ளம் வந்திருக்கும். அதுதான் சிக்கலாக இருக்கும் போல.

இவ்வாறு கங்காணி கூற, அந்நேரம் பார்த்து விதானையார் விசுவலிங்கம் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

இந்தா விதானையார் வந்து விட்டார். அவருக்கு ஆயுள் நூறு. சாத்திரியார் சதாசிவம் கூற, இந்த நாட்டில 100 வயது வரை இருந்து என்ன செய்யிறது. விதானையார் பதிலளித்தபடி ஆலடியில அமர்ந்தார்.

**சிறாப்பர்:** அதுசரி எண்டைக்கும் முதலில வாற விதானையார் இண்டைக்கு லேற்றாப் போனதற்கு ஏதோ காரணம் இருக்கத்தான் செய்யும்.

**விதானையார்:** பொன்னியின் செல்வன் படம் பார்ப்பம் எண்டு என்ர பேரப் பிள்ளையள் ஒரே பிடியா நிண்டினம். அதுதான் படத்திற்குப் போய் வந்ததில லேற்றாப் போச்சுது.

**மூப்பர்:** அட, அப்ப விதானையார் பொன்னியின் செல்வன் படம் பார்த்திட்டார். எப்படி விதானையார் படம்.

**விதானையார்:** நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில விழுந்து விழுந்து வாசிச்ச நாவல் தானே கல்கி எழுதின பொன்னியின் செல்வன்.

அப்ப வாசிச்சம். இப்ப படமாப் பார்த்திருக்கிறம். எங்கட கெடுகாலம் மணிரத்தினம் அந்தப் படத்தைத் தயாரித்ததுதான். என்ன விதானையார் சொல்லுறியள் பண்டிதர் அவசரப்பட்டார்.

**விதானையார்:** மணிரத்தினம் ஈழத்தமிழர்களுக்கு எதிரானவர்தானே. இன்னும் தெளிவாச் சொல்லுறதா இருந்தா மணிரத்தினம் தமிழ் மக்களுக்கே எதிரானவர்தான்.

சோழ மன்னர்களின் புலிக் கொடியைப் படத்தில மறைப்புச் செய்த மணிரத்தினம் இலங்கை பௌத்த சிங்கள நாடு, அங்கு சிங்களவர்கள் தான் அந்தக் காலம் தொடக்கம் ஆட்சி செய்தனர் என்பதை நிரூபிக்கிறதில கடுமையாக இருந்துள்ளமை தெரிகிறது.


**கங்காணி:** அட, சங்கதி அப்படியோ. அது தான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விழுந்தடித்துக் கொண்டு பொன்னியின் செல்வன் படத்தைப் பார்த்திருக்கிறார்.

**பண்டிதர்:** கன்னத்தில் முத்தமிட்டால் என்ற படத்தையும் மணிரத்தினம்தானே தயாரித்தவர். விடுதலைப் புலிப் பெண் போராளிகள் தொடர்பில உண்மையைக் கூறாமல், போராளிகளைக் கொச்சைப்படுத்திற எண்ணத்தோட கதையை ஆக்கினவரல்லோ.

**வாத்தியார்:** அப்ப தமிழ் நாட்டில கூட இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழர்கள் என்பதையும் இங்கு [illegible] மன்னர்களின் ஆட்சி நடந்ததென்பதையும் இலங்கைவேந்தன் இராவணேஸ்வரன் மிகச் சிறந்த சிவ பக்தன் என்பதையும் எங்களால எடுத்துக் கூறி அது தொடர்பான கருத்துருவாக்கத்தை ஏற்படுத்த முடியல்ல எண்டு சொல்லுறியள்.

**பண்டிதர்:** சோழ மன்னர்களின் ஆட்சிக் கொடி புலிக் கொடி என்பதைக் கூட, பட்டவர்த்தனமாகக் காட்டாமல் புலிகளின்ர கால் நகங்களைக் கொடியில காட்டுகிற மணிரத்தினம் போன்றவர்களை ஒருக்காலும் திருத்த முடியாது.

பண்டிதர் பரமலிங்கம் ஆக்ரோசமாகக் கூறியதும் ஆலடியில அமைதி நிலவியது. அந்த அமைதியின் மத்தியில் சிறாப்பர் கனகசபை ஒரு பேப்பர் கட்டைப் புரட்டிப் புரட்டிப் பார்த்த வண்ணம் இருந்தார்.



**ஈழத் தமிழர்களுக்கு எதிரானவர் என்பதை மணிரத்தினம் உறுதி செய்துள்ளார்**

இதனை அவதானித்த சாத்திரியார் சதாசிவம் என்ன சிறாப்பர் சித்திரகுப்தன் எழுதின ஓலை வந்திட்டுது போல என்று கூற, ஆலடியில சிரிப்பொலி எழுந்தது. சிரிப்பொலியை அடக்குவது போல சிறாப்பரின் பதில் அமைந்தது.

**சிறாப்பர்:** அதையேன் கேட்கிறியள். கள்ள உறுதி முடிக்கிற மாபியாக்களால இங்க இருக்க முடியாதெண்ட நிலைமை வந்திட்டுது. யாழ்ப்பாணத்தில [illegible]கிற என்ர காணி ஒண்டைக் கள்ள உறுதி முடித்து விற்றுப் போட்டாங்கள். நான் கனடாவுக்குப் போன காலத்தில இந்த மோசடி நடந்திருக்குது.

**விதானையார்:** என்ன சிறாப்பர் சொல்லுறியள். ஒருதற்ற காணியைக் கள்ள உறுதி முடித்து விற்கிறதென்பது ஒரு பெரிய கிரிமினல் வேலையல்லோ.

அதைவிட, உறுதி எழுதிற பிரக்கிராசி, காணி வேண்டுகிறவர் என எல்லாரும் கள்ள வேலை செய்தால்தானே கள்ள உறுதி முடித்துக் காணியை விற்க முடியும்.

**சிறாப்பர்:** எல்லாம் நடந்துதான் இருக்குது. இஞ்ச ஒருசில பிரக்கிராசிமார் கள்ள உறுதி எழுதிறதில கெட்டிக்காரர்களாம். இவர்களின்ர இந்தச் செயலால நேர்மையாக நடக்கிற பிரக்கிராசிமார்களும் கவலைப்படுகினம் எண்டு கேள்விப்பட்டன்.

**கங்காணி:** அதுசரி சிறாப்பர் இப்ப என்ன நிலையில இருக்குது.

**சிறாப்பர்:** கள்ள உறுதி முடித்துக் காணி விற்கிற வேலை யாழ்ப்பாணத்தில போதை வஸ்து வியாபாரம் போல நடக்குது.

இந்த மாபியாக்கள் கூலி ஆட்களை வைச்சு அடிதடி, வெருட்டல் எண்டு சண்டித்தனம் காட்டி அப்பாவி மக்களை வெருட்டுகிறதால, அவர்கள் பயந்து போய் இருக்கினம். காணி போனாலும் பரவாயில்லை. இந்தக் கூட்டத்தோட முண்டினால் நிம்மதியாக வாழவே முடியாது எண்ட நிலையில காணியின்ர உண்மையான சொந்தக்காரர் வாய் மூடி மௌனித்துப் போய் இருக்கினம்.

**சாத்திரியார்:** இதென்ன சிறாப்பர் சொல் K ¤ B^. "ஒரு கோழையும் வீரனாவான் தன் உடைமைகள் பறிபோகும் போது" எண்டு அறிஞன் ஒருவன் கூறியிருக்கிறான். தன்ர சொந்தக் காணியை மற்றவர் கள்ள உறுதி முடித்து விற்கிறதெண்டால், பொலிஸில முறையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேணுமல்லோ.

**சிறாப்பர்:** என்ன சாத்திரியார் புதுக்கதை சொல்லுறியள். கள்ள உறுதி முடிக்கிற கூட்டத்திற்கும் பொலிஸாருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்குது.

நாங்கள் பொலிஸில முறையிட்ட கையோட அந்தத் தகவல் அந்த மாபியாக்களுக்குப் போய்ச் சேருது. பிறகென்ன செய்ய முடியும்.

சிறாப்பர் இவ்வாறு கூறியதும் ஆலடியில் மௌனம் நிலைத்தது. வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்ய முடியும் என்பதை அந்த மௌனம் ராகமாக இசைத்தது. மௌனத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:** கள்ள உறுதி முடித்துக் காணி விற்கிறவர்கள் தொடர்பில உரிய நடவடிக்கை எடுக்கா விட்டால் நிலத்தின் உரிமைப் பத்திரமாகிய உறுதியை வைத்திருக்கிறவனின் தன்மையைப் பொறுத்தே அதன் சட்ட வலிமை தங்கியிருக்கும்.

ஆகையால இதில இருந்து மக்களைப் பாதுகாப்பதாக இருந்தால், அதனை நீதிமன்றங்களால மட்டுமே செய்ய முடியும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிக்போஸில் போட்டியாளராக பங்கேற்றிருக்கும் ஜனனி நம்ம யாழ்ப்பாணப் பொண்ணாமே?

**சுதன் — குப்பிளான்**

**தமிழினத்திற்கான தீர்வு 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் என்றார்கள். இப்போது 22 இல் வந்து நிற்கிறார்களே?**

பேரினவாத அரசுகள் ஒரு நாளும் தமிழினத்திற்கான தீர்வைத் தராது.

இவர்கள் நமக்கு தீர்வு தருகிறார்கள் என்று நாம் நம்புவோமாக இருந்தால் நம்மைப் போல முட்டாள்கள் வேறு யாருமாக இருக்க முடியாது.

13 ஐக் கடந்து 22 இற்கு வந்து விட்டார்கள். இனி எப்படி 13 இற்குப் போவார்கள் சொல்லுங்கள்.

**சிவம் — வதிரி**

**மண்டபத் திருமணங்களா? வீட்டுத் திருமணங்களா? மனநிறைவானவை வியாசரே?**

மண்டபத்திருமணங்களில் ஆடம்பரமும் கௌரவமும் தங்கி நிற்குமே தவிர ஒன்று கூடி ஒரு பாரிய செயலைச் செய்த திருப்தியைத் தராது.

ஆனால் வீட்டுத் திருமணம் எனின் உறவுகள் ஒன்றுகூடி ஒவ்வொன்றாய் பார்த்துப் பார்த்துச் செய்வதில் திருப்தி இருக்கும்.

அதிலும் பந்தி பரிமாறும் தருணம் தரும் மகிழ்வை வேறு எதுவும் தந்துவிடாது. ஒருவருக்கு பருப்பு வழங்கிக் கொண்டிருக்கும் போதே அங்கிருந்து குரல் ஒன்று வரும் இங்கு சாம்பார் என்று ஓடிப்போய் அவருக்குச் சாம்பார் வழங்குவதற்குள் சோறு என்று குரல் ஒலிக்கும் இப்படி விழுந்து விழுந்து கவனிக்கும் திருப்தி வேறு எங்கு கிடைத்துவிடும்.

**இதழினி — புலோலி**

**பல வருடங்கள் கட்டிக் காத்த நட்பை காத்துவாக்கிலே வந்த காதல் களவாடிச் சென்று விடுகிறதே?**

காதல் மோட்டார் சைக்கிள் சில்லிற்குள் அடிக்கும் காற்றுப் போல.

முள்ளு, ஆணி ஏதும் குத்தி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஒருவேளை காற்றுப்போய் விட்டால் மறுபடியும் அதே காற்றை நிரப்ப முடியாது.

முதலில் ரயரை ஒட்ட வேண்டும். அதன் பின்பே காற்று அடிக்க வேண்டும். அடிக்கும் காற்று ஏற்கனவே எமது ரயரில் இருந்த காற்றாக கண்டிப்பாக இருக்காது. ஆனால் நட்பு என்பது ரயர் போன்றது. காற்றை விட்டாலும் மோட்டார் சைக்கிளில் இருந்து விலகி விடாது.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**மதுவன் — மீசாலை**

**குடும்பத்தைச் சீரழிக்கும் கசிப்பினை ஒழிக்க முடியாதா வியாசரே?**

மதுபானங்களின் விலை அதிகரிக்க சட்டவிரோத போதைவஸ்தின் பெருக்கம் அதிகரித்தே தீரும்.

நாம் சிறுவராய் இருக்கும் போது உயிர் கொல்லும் பொருளாக இருந்தது இந்தக் கசிப்புத்தான்.

ஆனால் இப்போது கசிப்பு சாதாரணமான ஒன்றாய் அது ஆகிவிட்டது. கஞ்சா, அபின், ஹெரோயின், ஐஸ் போதை மாத்திரை என மிக மோசமானவைகளை எம் சமூகத்தில் நுழைத்திருக்கிறார்கள். எங்குபோய் முடியப்போகிறதோ கடவுளே!

**விஜயரட்ணம் — யாழ்ப்பாணம்**

**தெற்கின் தலைவர்களும் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் வடக்கு-கிழக்கு என்று கூறாமல் வடக்கு என்று மட்டும் கூறுகிறார்களே வியாசரே?**

வடக்கு-கிழக்கை வழக்குப் போட்டு பிரித்து விட்டார்கள். ஆனாலும் வடக்கு கிழக்கின் ஒன்றிய பூர்வீக உறவை எவராலும் பிரித்து விட முடியாது.



மண்டபத் திருமணங்களா? வீட்டுத் திருமணங்களா? மனநிறைவானவை வியாசரே?

**ராஜ் — மாதகல்**

**இந்த நாடு பௌத்த நாடாக இருந்தால் மாத்திரமே அனைத்து இனங்களும் நிம்மதியாக வாழ முடியும் என்ற சரத் வீரசேகரவின் கூற்று எப்படிப் பட்டது?**

சரத் வீரசேகர எப்போதும் இனங்களுக்கிடையில், மதங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதத்தில் விதண்டாவதம் பேசுபவர்.

அவர் பேசட்டும் என்று விட்டு விட முடியாத படி பேச வல்லவர்.

சிங்கள பௌத்தத்தை மேன்மைப்படுத்துவதில் ஒன்றும் பிரச்சினை இல்லை.

அதற்காக ஏனைய இன-மதங்களை கீழ் இறக்கிப் பேசுவதைக் கேட்கும் போது சுர் என்று ஏறும்.

என்ன செய்ய முடியும். பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு சீறும் போது பார்த்துக் கொண்டுதானே இருக்க முடியும்.

இரைக்காகவேனும் பாம்பு கீழ் இறங்கித்தானே ஆக வேண்டும்.

**இந்துஜன் — யாழ்ப்பாணம்**

**பிக்போஸில் போட்டியாளராக பங்கேற்றிருக்கும் ஜனனி நம்ம யாழ்ப்பாணப் பொண்ணாமே?**

ஆம், யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்தவர். சமூக வலைத்தளங்களின் செல்வாக்கினால் பிக்போஸ்வீட்டுக்குள்செல்லும்வாய்ப்பைபெற்றார்.

பிக்போஸ் வீட்டிற்குள் பேசும் அத்தனை இந்தியத் தமிழ் உச்சரிப்புக்குள்ளும் ஒரு அழகான தமிழ் உச்சரிப்புடன் ஜொலிக்கிறார் ஜனனி.

பிக்போஸ் வீட்டுக்குள் இருப்பவர்களுக்கும் ஜனனியின் கொஞ்சும் தமிழ் கேட்க ஆசை என்பதை அவரை பேச விட்டுப் பார்க்கும் போது புரிகிறது.

எம் தமிழினம் பட்டபாடுகளையும் அந்த வீட்டுக்குள் சொல்வாராக இருந்தால் மிக்க மகிழ்ச்சியாக இருக்கும்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**நாடற்ற தமிழினம் நாடற்றவர்களாகவே மடிந்து போகுமா வியாசரே?**

தமிழினத்திற்கு நாடில்லை என்று யார் சொன்னது? இந்த உலகத்தையே வீர வாளினால் ஆண்டவன் தமிழன்.

ஆயினும் கால ஓட்டம் அவனின் வீரத்தையும் விவேகத்தையும் குறைத்து விட்டது. இப்போது தமிழினம் நாடற்றவராய் இருந்தாலும் உலகம் முழுவதும் தமிழினம் இல்லாத இடம் இல்லை என்ற அளவில் வியாபித்திருக்கின்றார்கள்.

உலகில் எந்த குறுக்கு வீதிக்குள்ளும் ஒரு தமிழன் இருக்கவே செய்வான். ஆதலால் தமிழுக்கும் தமிழினத்திற்கும் அழிவே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: உதய கீதம்
இயற்றியவர்: வாலி
இசை: இளையராஜா
பாடியவர்: பாலசுப்பிரமணியம்



சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்
ஆகாயம் பூக்கள் தூவும் காலம்
நாளை என் கீதமே எங்கும் உலாவுமே
நாளை என் கீதமே எங்கும் உலாவுமே
என்றும் விழாவே என் வாழ்விலே
சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்
ஆகாயம் பூக்கள் தூவும் காலம்

லலலா... லலலா...
லலலா... லலலா...
லலலா... லலலா...

போகும் பாதை தூரமே வாழும் காலம் கொஞ்சமே
ஜீவ சுகம் பெற ராக நதியினில் நீ நீந்தவா
போகும் பாதை தூரமே வாழும் காலம் கொஞ்சமே
ஜீவ சுகம் பெற ராக நதியினில் நீ நீந்தவா
இந்த தேகம் மறைந்தாலும் இசையாய் மலர்வேன்
இந்த தேகம் மறைந்தாலும் இசையாய் மலர்வேன்
கேளாய் பூமனமே... ஹோ...
சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்
ஆகாயம் பூக்கள் தூவும் காலம்

உள்ளம் என்னும் ஊரிலே பாடல் என்னும் தேரிலே
நாளும் கனவுகள் ராஜ பவனிகள் போகின்றதே
உள்ளம் என்னும் ஊரிலே பாடல் என்னும் தேரிலே
நாளும் கனவுகள் ராஜ பவனிகள் போகின்றதே
எந்தன் மூச்சும் இந்த பாட்டும் அணையா விளக்கே
எந்தன் மூச்சும் இந்த பாட்டும் அணையா விளக்கே
கேளாய் பூமனமே... ஹோ...


சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்
ஆகாயம் பூக்கள் தூவும் காலம்
நாளை என் கீதமே எங்கும் உலாவுமே
நாளை என் கீதமே எங்கும் உலாவுமே
என்றும் விழாவே என் வாழ்விலே... ஓ...
சங்கீத மேகம் தேன் சிந்தும் நேரம்
ஆகாயம் பூக்கள் தூவும் காலம்

# மூழ்கிய டைட்டானிக்கை நேரில் பார்க்க ஆசை

1997 ஆம் ஆண்டு வெளியாகி ஒஸ்கார் விருதுகளை அள்ளிக்குவித்த 'டைட்டானிக்' படத்துக்கு எப்படி இன்றுவரை பலபேர் ரசிகர்களாக இருக்கிறார்களோ, அதைவிடவும் பலமடங்கானவர்கள் மூழ்கிய டைட்டானிக் கப்பலைப் பார்க்க வேண்டுமென்ற கனவுடன் இன்றும் இருக்கின்றனர்.

அந்தப் படத்தில் கூறியவாறே, மூழ்கவே மூழ்காது என்று நம்பிக் கொண்டிருந்த டைட்டானிக் கப்பல் மூழ்கி, கிட்டத்தட்ட 110 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனாலும், மூழ்கிச் சிதைந்த அந்தக் கப்பலை ஒரு முறையாவது பார்க்க வேண்டுமென்ற ஆசை பலருக்கும் இருக்கத்தான் செய்யும்.

அப்படி, தன்னுடைய சிறுவயதில், மூழ்கிய டைட்டானிக் கப்பலைப் பார்க்க வேண்டும்என்று ஆசையை வளர்த்துக்கொண்ட ரெனாட்டா என்ற பெண், அதற்காக 30 வருடமாக சிறுகச் சிறுக ரூ.2 கோடியைச் சேமித்து, தன் ஆசையைத் தானே நிறைவேற்றிக் கொண்ட நிகழ்வு பலரை



யும் ஆச்சரியப்படுத்தியிருக்கிறது. ரெனாட்டா, இதற்காக ஐந்து பேர் செல்லக்கூடிய பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பலில் சென்று கடலுக்கடியில் சிதைந்து கிடந்த டைட்டானிக் கப்பலை நேரில் பார்த்திருக்கிறார்.

நான் ஒன்றும் கோடீஸ்வரி அல்ல. ரொம்ப காலமாகப் பணத்தைச் சேமித்து வருகிறேன். எனக்கென்று சொந்தமாக கார் இல்லை. இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஆனால், இந்த முடிவுகள் எல்லாமே டைட்டானிக் கப்பலைப் பார்க்கச் செல்ல வேண்டும் என்று விரும்பியதால் எடுக்கப்பட்டன" என்று கூறினார்.

# என்னங்க சேர் உங்க சட்டம்?

கடுமையான சட்டங்கள் கொண்ட நாடுகள் பற்றிக் கேள்விப்பட்டிருப்போம். ஆனால், விநோதமான, விசித்திரமான சட்டதிட்டங்களைக்கொண்ட நாடுகள் பற்றித் தெரியுமா... அப்படியான நாடுகளும் அங்கிருக்கும் சில விநோதச் சட்டங்களும் இங்கே..!

இத்தாலியிலுள்ள டூரின் நகரில், செல்லப்பிராணியாக நாய் வளர்ப்பவர்கள், தினசரி குறைந்தது மூன்று முறையாவது தங்களது நாயை நடப்பதற்காக வெளியில் கூட்டிச் செல்ல வேண்டும். ஒருவேளை அப்படிச் செய்யவில்லை என்பதை நகர நிர்வாகம் கண்டறிந்தால், அபராதமாக 500 யூரோ (இந்திய மதிப்பில் சுமார் ரூ.40,000) வசூலிக்கப்படும்.

மர்மதேசமான வடகொரியாவில், பெண்கள் 18 வகை ஹேர் ஸ்டைலும் ஆண்கள் 10 விதமான ஹேர் ஸ்டைலும் மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதி. அதிலும், யாராவது ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் ஹேர் ஸ்டைலைக் கொப்பியடித்தால் நிச்சயம் சிறைதான். அதே போல, தேசத்தந்தை (இன்றைய ஜனாதிபதியின் தாத்தா) கிம் இல் சங்-கின் நினைவு தினத்தையொட்டி, ஆண்டு தோறும் ஜூலை 8 ஆம் திகதியன்று யாரும் சிரிக்கக்கூடாது, மது அருந்தக்கூடாது, கேளிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்றும் அங்கு சட்டம் இருக்கிறது.

சமோவா என்ற தீவு நாட்டில், மனைவிகளின் பிறந்த நாளை மறப்பது குற்றம். 'எனது பிறந்தநாளைக் கணவர் மறந்து விட்டார்' என்று மனைவி புகார் கொடுத்தால், கணவர் சிறைக்குச் செல்ல வேண்டியிருக்கும்.

1992 முதல் சிங்கப்பூரில் சுவிங்கம் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டிருக்கிறது. மீறிப் பயன்படுத்துவோர், வெளிநாட்டிலிருந்து வாங்கி வருவோர், விற்பனை செய்வோருக்கு அபராதம் விதிக்கப்படுகிறது!

அவுஸ்திரேலியாவிலுள்ள விக்டோரியா மாகாணத்தில், எலைக்ட்ரீஷியன் உரிமம் வைத்திருப்பவர்கள் மட்டுமே பல்பு / லைட் மாற்ற முடியும்.

ஜார்ஜியா நாட்டிலுள்ள குவிட்மேன் நகரத்தில், கோழிகள் சாலையைக் கடக்கத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. கோழிகளை, எஜமானர்கள் கட்டுக்குள் வைத்திருப்பதை உறுதி செய்யவே இந்தச் சட்டமாம்.

அமெரிக்காவின் டென்னஸ்ஸி மாகாணத்தில், நெட்ஃப்ளிக்ஸ் பாஸ்வேர்டைப் பகிர்வது குற்றம். இதில் விநோதம் என்னவென்றால், நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனமே ஒரே ஐடி-யை நான்கு பேர் பயன்படுத்தலாம் என்கிறது.

நெட்ஃப்ளிக்ஸ் மட்டுமல்ல மியூசிக், சினிமா உள்ளிட்ட பொழுதுபோக்குகளை வழங்கும் எந்தச் செயலியின் பாஸ்வேர்டையும் அங்கு பகிரக் கூடாது. மீறினால், ஓராண்டுச் சிறையும் அபராதமும் நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.மு 2 ஆம் நூற்றாண்டில் இறந்தவனின் உடல்

# 1980களில் கிடைத்த விநோதம்!

சரித்திரம் என்பது எப்போதுமே பல மர்மங்களை உள்ளடக்கியதாகத்தான் இருந்து வந்திருக்கிறது. சில சரித்திர ஆய்வாளர்கள் பகிர்ந்து கொள்ளும் தகவல்கள் நம்புவதற்குக் கடினமானவை. அதுவும் செவிவழிச் செய்திகள் இவற்றுடன் கலந்து நம்மை அடையும்போது நம்பகத்தன்மை மேலும் கொஞ்சம் குறையும்.

அதேசமயம் பொய்கள் என்று ஒதுக்க முடியாத அளவுக்கு அவற்றில் பல்வேறு கோணங்கள் இருக்கும். அப்படிப்பட்ட சுவாரஸ்யமான அதிசயங்களையும் மர்மங்களையும் விநோதங்களையும் இந்தத் தொடர் விபரிக்கிறது.




பெரும் பரப்பில் (Lindow Moss) அமைந்த தொழிற்சாலை அது. அதன் ஒரு பகுதியில் சற்றே சகதியான இடம் ஒன்றைத் தோண்டிக் கொண்டிருந்தார்கள் சில தொழிலாளிகள். அவர்களில் ஒருவனுக்குக் கொஞ்சம் விளையாட்டுப் புத்தி. வேலைக்கு நடுவே கொஞ்சம் ஓய்வு கிடைத்த போது, சற்றுத் தள்ளியிருந்த பகுதியில் சகதியோடு கூடிய நிறைய மரத் துண்டுகள் இருப்பதைப் பார்த்தான்.

அவற்றிலிருந்து ஒன்றை எடுத்து தன் நண்பன் மீது எறிந்தான். அவன் சட்டென்று நகர்ந்து விட அந்தப் பெரிய மரத்துண்டு கீழே விழுந்தது.

விழுந்த வேகத்தில் அதன் மேல் பரப்பிலிருந்த கடினமான சேற்றுப் பகுதி விலகியது. அப்போது அதைப் பார்த்த இருவருக்கும் பயங்கர அதிர்ச்சி. காரணம் அவர்கள் நினைத்திருந்தது போல அது ஒரு மரத்துண்டு அல்ல, ஒரு மனிதனின் பாதம்.

தகவல் வேகமாகப் பரவியது. உடனடியாக காவல்துறையினர் வரவழைக்கப்பட்டனர். எந்தப் பகுதியிலிருந்து அந்த மரத் துண்டு எடுக்கப்பட்டது என்பதை உறுதி செய்து கொண்ட அவர்கள் அந்த பகுதியில் மேலும் தோண்டினார்கள். பாதத்துக்கு உரியவனின் மீதி உடலும் கிடைத்தது.

ஆனால் அது சமீபத்தில் மறைந்த யாருடைய பிரேதமும் இல்லை.

பிரபல அகழ்வாராய்ச்சி நிபுணர் டர்னர் என்பவர் வரவழைக்கப்பட்டார். பலவித ஆராய்ச்சிகளுக்கு அந்த உடலை உட்படுத்திய அவருக்கு பெரும் வியப்பு. கி.மு இரண்டாம் நூற்றாண்டில் இறந்த ஒருவரது உடல் அது.

அந்தப் பகுதி மண்ணில் அமில சத்து அதிகமாக இருந்ததோடு காற்று மிகமிகக் குறைவாகவே இருந்ததால் அந்த உடல் இவ்வளவு வருடங்கள் பாதுகாக்கப்பட்டிருந்தது!

இறந்தவனைப் பற்றிய பல விபரங்கள் அறிவியல் சோதனைகள் மூலம் தெரிய வந்தன. சுமார் 30 வயதில் இறந்தவன் அவன். அதிக உயரமும் அல்ல குள்ளமும் அல்ல.

வலிமையானவன் என்பதும் தெரிய வந்தது. எந்த தீவிரமான உழைப்பும் இல்லாததால் அவனது கைப் பகுதி மிகவும் மென்மையாக இருந்தது. எனவே பணக்காரனாக இருந்திருக்க வேண்டும் என்று கருதப்பட்டது.

எல்லாவற்றையும் விட முக்கியமான கண்டுபிடிப்பு அவன் கொலை செய்யப்பட்டு இருக்கிறான் என்பது. தலையில் இரண்டு பலமான அடிகள், தொண்டையில் கத்தியினால் ஒரு கீறல், இதயப் பகுதிக்குச் செல்லும் இரத்தக் குழாயிலிருந்து, தொண்டைப் பகுதியிலிருந்து இரத்தம் வெளியேறியதால் அவன் இறந்திருக்கிறான்.

ஆராய்ச்சியாளர்களின் மனதை அரித்த ஒரு கேள்வி இதுதான். இப்படி ஒரு பயங்கரமான முறையில் கொலை செய்யப்பட்டும் அவன் உடலில் இதற்கு எதிராகப் போராடியதற்கான எந்த அறிகுறியும் இல்லையே.

**இது எப்படிச் சாத்தியம்?**

பிறகுதான் அந்த விஷயம் கிடைத்தது. அவன் டிரூயிட் மதப் பிரிவைச் சேர்ந்தவன். தீய்ந்துபோன பார்லி கேக்கைத் தேர்ந்தெடுத்த துரதிர்ஷ்டசாலி.

டிரூயிட் என்ற ஒரு இரகசிய மதப் பிரிவு உண்டு. கி.மு எட்டாம் நூற்றாண்டு வரை இந்தப் பிரிவு பரவலாக இருந்திருக்கிறது. மனிதனை இறைவனுக்கு அருகே அழைத்துச் செல்வதாகக் கூறிய இந்த மதத்தில் நரபலி என்பது சகஜம்.

திடீரென்றுஒருவிழாவை ஏற்பாடு செய்வார்கள். ஒரு பெரிய பாத்திரத்தில் நிறைய பார்லிகேக்குகள் வைக்கப்பட்டிருக்கும். உறுப்பினர்கள் கண்களை மூடிக் கொண்டு ஆளுக்கு ஒரு கேக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

முழுவதும் தீய்ந்து போன கேக் ஒன்றும் இந்தப் பாத்திரத்தில் இருக்கும். அது யார் கையில் கிடைக்கிறதோ அவருக்கு அன்றுதான் இறுதி நாள்.

அதாவது அவரைக் கொலை செய்து அவரது இரத்தம் முழுவதையும் வெளியேற்றி விடுவார்கள்.

இதில் முக்கியமான விதி என்னவென்றால் அந்த நரபலி சடங்கின் போது அவர் எந்த எதிர்ப்பையும் காட்டக் கூடாது. அதனால்தான் கிடைத்த பிரேதத்தில் எதிர்ப்பு காட்டியதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை.

இவரது உடல் இப்போது பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் உள்ளது.

(மர்மம் தொடரும்...)




# டி -20 உலகக் கிண்ணத்தில் சம்பவம் செய்த இலங்கை வீரர்கள்

என்னதான் கிரிக்கெட் டீம் கேமாக இருந்தாலும், தனிப்பட்ட வீரர்களின் திறனும் ஆளுமையும்தான் இதற்கான முதலீடுகள். விறுவிறுப்பிற்கும் பொழுதுபோக்கிற்கும் உத்தரவாதம் தரும் காரணிகளாகின்றன.

**ரங்கனா ஹெறாத், 5/3 (2014):**

"120 பந்துகளில், 120 ரன்களை டிஃபெண்ட் செய்ய வேண்டும்" இச்சூழல், டி-20 இல் நட்சத்திர பௌலர்கள் இருக்கும் அணியையும் நடுங்கச் செய்யும். ஆனால், அதே நிலை சில அசாத்தியங்களையும் அரங்கேற்றும். அரையிறுதிக்கு முன்னேற நியூசிலாந்தை வென்றாக வேண்டிய போட்டியில் இலங்கைக்கும் இதே தான் நேர்ந்தது.

பட்ஸ்மேன்கள் ஒட்டு மொத்தமாகத் தோற்க, 120 என்ற இலக்கே இலங்கை தொடரைவிட்டு வெளியேற்றிவிட்ட தோற்றத்தை உண்டாக்க, நம்பமுடியாதது நிகழ்ந்தது. டி-20 இல் வேரியேஷன்களால் வலை விரிக்கும் ஸ்பின்னர்களுக்கு மத்தியில், ஸ்டாக் டெலிவரியையும், டர்ன், ஃப்ளைட், டிப், ட்ரிப்டையும் பெரிதாய் நம்பி சூழ்ச்சியால் விக்கெட் வீழ்த்தும் கிளா சிக்கல் பௌலர்தான் ஹெறாத். டெஸ்ட் மெட்டீரியலாக அடையாளம் காணப்பட்ட அவர், இந்த டி-20 இல் வெற்றித் தூதுவனாக உருவெடுத்தார்.

ஃப்ளைட், மெக்கல்லம்மைச் செயலற்றவராக்க, டர்ன் நீசமுக்கும், ராச் சிக்கும் சதிசெய்தது. ராஸ் டெய்லருக்கு ஓவரின் முதல் நான்கு பந்துகளும் எங்கே பிட்ச் ஆனாலும் ஸ்டம்பை நோக்கியே டர்ன்ஆகி, டாட் பாலாகி பிரஷர் ஏற்றியது. 5 ஆவது பந்து வைத்த குறிதப்பாமல் பட்டைத் தகர்த்து எல்பிடபுள்யூ ஆனது.

இதுதவிர்த்து, ரன்அவுட்டால் விழுந்த இரு விக்கெட்டுகளிலும் ஹெறாத் தின்பங்கிருந்தது. விளைவு, 60 ரன்களுக்கு நியூசிலாந்தை ஓல்அவுட் ஆக்கியது இலங்கை.

17 டி-20 களில், 18 விக்கெட்டுகளை மட்டுமே சாய்த்திருந்தாலும் ஹெறாத்தின் இந்த ஒரு ஸ்பெல் காலத்திற்கும் நின்று பேசும்.

**அஜந்தா மெண்டீஸ், 6/8 (2012):**

குறுகிய காலமே எனினும், லிமிடெட் ஃபார்மேட்டில் வெற்றி உலா வந்தவர் மெண்டீஸ். பந்தைத் தனது கரங்களான மந்திரக் கோலால் ஆட்டி வைப்பவர். மனதுக்குள் எதிர்பார்த்த வகையிலேயே தனது மாயப் பந்தை களத்தில் அவர் நகர வைப்பதும் அது பேட்ஸ்மேன்கள் எதிர்பாராத வகையில் இருந்ததும் தான் அவரைப் பேராபத்தானவராக்கியது.

ஒன்பது மாத இடைவெளிக்குப்பின் சர்வதேச கிரிக்கெட்டிற்குத் திரும்பியபோதும், இப்போட்டியில் அதைத் திரும்பவும் நிகழ்த்தினார்.

183 என்ற பெரிய இலக்கைத் துரத்திய சிம்பாவே பட்ஸ்மேன்களுக்கு எதையும் கணிக்கக்கூடிய அவகாசத்தை, மெண்டீஸ் தரவில்லை. கைகளின் பின்புறமிருந்து விடுவிக்கப்படும் கூக்ளி, அவரது சிக்நேச்சர் பாலான கேரம்பால், டாப் ஸ்பின்னர், தொட்டுக்கொள்ள கொஞ்சம் லெக்பிரேக் என சுழற்சி முறையில் சுழலும் பந்துகளை அனுப்பீத் திணறடித்தார்.

6 ஆவது ஓவரில் நுழைந்தவுடன் சிபாந்தா, டெய்லர் ஆகிய இரு விக்கெட்டுகளை வீழ்த்தித் தொடங்கியவர், இறுதியில் இரண்டு மெய்டன்களோடும் ஆறு விக்கெட்டுகளோடும் முடித்தார். மஸகட் ஷாவுக்கும், சிகும்புராவுக்கு வீசிய அட்டகாசமான கூக்ளிகள், சத்தமேயில்லாமல் ஸ்டம்பைச் சாய்த்தன. அஜந்தா மற்றும் ஜீவன் மெண்டீஸின் இரு புறத் தாக்குதலில் உருக்குலைந்து 82 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியுற்றது சிம்பாவே.

இந்தியா, அவுஸ்திரேலியாவுக்கு எதிராக முன்னரே ஆறு விக்கெட்டுகளை அவர் எடுத்திருந்தாலும், உலகக் கோப்பையில் வந்த இது, இன்னமும் ஸ்பெஷல். அந்த சீசனின் லீடிங் விக்கெட் டேக்கரும் (15) மெண்டீஸ் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகளையும் ரசித்து விட்டு..

நீள் அருவியின் இசையோசை
இளம்தென்றலின் வருடலாசை
பனிப்பூவின் மென்மை அழகு
இவைதான் இயற்கை என்றால்
இறைபடைப்பில் தவறுள்ளதா?
உதயசூரியனின் இதமான வருகை
மதியமாகையில் கனமாவதால்
படைத்தவனில் தப்பென அர்த்தமா?

தட்பமும் வெப்பமும் தகுதியில் வேறுதான்
இனியவைதான் சுவைக்கும் என்றால் - நீ
அறுசுவைக்கு தகுதியற்றுப் போவாய்
வெயில் குழைத்து உடல் பூசிவிடு
வடியும் வியர்வையை சரியும் அருவியில்
சலவை செய்து விடு-அக்கணமே
குளிருக்கும் சூட்டுக்கும் காதலன் ஆகிவிடுவாய்.

வலிகளை அணைத்திடு-உனக்கென
உலகவாசல் திறந்து வரவேற்கும்
புன்னகை மட்டும் போதுமென்று
புதுமைகளை புறக்கணித்திடாதே
தனித்துப் போவாய்

. கட்டாந்தரைகளை முத்தமிட
கால்களுக்கு அனுமதியிடு- உன்பாதம்
மெத்தைகளுக்கும் சிநேகிதனாகிவிடும்

மூளையின் நரம்புகளை சோகங்கள் சுருட்டையிலே
சாலையோர சங்கதிகளில் இதுவுமொன்றென
சல்லடை செய்து சலித்துப்போடு சகித்துக் கொள்
நாளை உன் மூளைக்கு நாடே உரிமை பேசும்

பாரதி பேசிய விடுதலை, காந்தி காட்டிய சுதந்திரம்,
தெரேசாவின் அன்பு, புத்தனின் பக்தியிவை
இலக்கியம் தாண்டிய இதயமென செய்திடு
புதைத்த பின்னும் முளைப்பாய் -நீ
செடியாய் அல்ல் விருட்சமாய்.

பிரம்மியா சண்முகராஜா

## வாரும்! நாம் நம்மை ஆள்வோம்!

பெட்டியில் பணமிருக்கு வட்டியும் வர இருக்கு
கட்டிய துணையிருக்கு கொட்டிய வளமிருக்கு
வீடுகள் பலவிருக்கு விதம்விதம் பொருளிருக்கு
காடிருக்கு களனியிருக்கு களித்திடச் சொத்திருக்கு
ஊரிலே உறவிருக்கு உறவினில் உயர்விருக்கு
பேருடன் புகழிருக்கு பெருமையாய் வாழ்விருக்கு

இத்தனையிருந்துமென்ன பித்தனைப் போல நீவிர்
எத்துணை இழிவாய் வாழ எத்தனிக்கின்றீர் ஏனோ!
புகையுடன் மதுவும் சேர போதையும் தலைக்கு ஏற
வகைவகைப் போதையாலே உம்மவர் குணமும் மாற
மிருகமாய் ஆகின்றீரே மேதினி வாழ்விலின்று
அருமையாய் வந்த வாழ்வின் அர்த்தமே புரியா நின்று

வருத்தங்கள் வகையாய் வந்து வருத்திட வாலிபர்கள்
மருத்துவமனைகள் தோறும் மரணிக்கும் இளையவர்கள்
போகின்றார் பூமிவிட்டு போதையைத் தினமும்
தொட்டு ஏகின்றார் எமனுலகம் ஐயகோ!
வாழ்வை விட்டு மறந்திடும்! போதை தன்னை
மரணத்தை வென்று வாழ்வோம்! துறந்திடும்
துட்ட போதை வாரும் நாம் நம்மை ஆள்வோம்!



க.சிவலிங்கம், மீசாலை கிழக்கு.

## தமிழா




நேற்று வரை நிலவில்லை தமிழா
நெஞ்சுக்குமே நிம்மதியில்லை தமிழா
காற்றின்றி மழை வருமோ தமிழா
அலை ஓசையின்றி கரை தொடுமோ தமிழா

நட்டுப் பறித்து தனக்காய் வாழும்
தமிழன் இங்கு வாழும் வரை
தமிழும் இங்கு தழைத்திடுமோ தமிழா
தன்னலம் சுரக்காத தலைவர்கள் இங்கே
தமிழுக்காய் வாழ்பவர் யாரும் உண்டோ தமிழா
தனக்கான பசி மறந்து
தமிழெனும் ருசியுணர்ந்து
தமிழுக்கா தமிழனாய்
வாழ்பவர்கள் உள்ளனரோ தமிழா
பகைவன் பரிசளிப்பான் உனக்காய்
பகைவனும் பகை மறப்பான் உன்னால்
இன்முகம் மலர்ந்திங்கு
இறைவனும் கரம் கொடுப்பான்
தமிழா உனக்காய்
தமிழுக்காய் தமிழனாய் நீ வாழ்ந்து விட்டால்

தென்புலத்தான், வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.

## மௌனத்தின் தேடல்- 580



## காலனித்துவம்

அரசியல் எனும் தடம் தனிலே கால்பதித்து
ஆட்சி எனும் ஓட்டப் பந்தயத்தில் ஓட்ட வீரர்களாகி
சூது கவ்வி சூட்சுமமுடன் ஆட்சியைக் கைப்பற்றி
காலனித்துவ ஆட்சியாளர்களை கைக்கொண்டு
காலக் கொடுமையால் கால் தடம் மாறி
அரசாட்சி அநாதை ஆட்சியாகியதே!

ஆ.பாலமதுஜா,
பருத்தித்துறை.

## விடாமுயற்சி

வாழ்க்கை என்னும் சக்கரத்தில்
வெற்றி தோல்வி மாறி வரும்
வலிமை உடையவர் போட்டியராயினும்
மனவலிமை நீ கொண்டு
முயற்சியினை மூலதனமாக்கு
தோல்விப் படிகளை ஏணியாக்கு
வெற்றிச் சிகரத்தை நீ அடைவாய்
விடா முயற்சி விஸ்வரூப வெற்றி.

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

## நானென்ற நான்

கெட்டிக்காரன் நானென்ற
அகந்தை மிகக் கொண்டு
இவரோ என்னை முந்துவாரென
அலட்சியத்துடன் நடந்தேன்.
முந்தியவரைக் கண்ட போது
என் மூளையில் பொறிதட்டி
அசடு வழிந்தேன்.

சி.இ. அன்புதுரை,
சம்மட்டியோலை,மானிப்பாய்.

## மௌனத்தின் தேடல்- 581



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## முயற்சி திருவினையாக்கும்

மைதானத்தில் நரியார் கை அசைத்து ஆரம்பித்து
வைக்க முயலுக்கும் ஆமைக்கும்
இங்கே ஓட்டப் பந்தயம்.
உடலில் சோம்பல் சிறிதுமின்றி
முயற்சி செய்த ஆமைக்கு அதில் முதலிடம்
முயலாமையால் அங்கே
இந்த முயலோ தோற்று நிற்கிறது.

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

## விவேகமே வாழ்வு

காட்டு விலங்குகள் களிப்புடன்
போட்டி ஒன்று வைத்து
வேகம் மட்டும் வாழ்வல்ல;
விவேகமே வாழ்வு என்று போதித்தது.

[illegible], கொக்குவில்.

## காதில் பூ

முயல், ஆமை ஓட்டப் போட்டியா?
அதில் ஆமை வெற்றி பெற்றதா?
முயலுக்கு ஜாரியாக ஓடுமா ஆமை?
சிறுவர் காதில் பூ வைத்த கதை இது.

பி. மதுஷ்சன், தையிட்டி.

## மானுடர்க்கு உணர்த்தும்...

மாடு மனை இல்லை மற்றவர்க்கே
மனதார தீமை விளைத்ததில்லை
கேடு நினையாது சூழலோடு இயைய
கிடைக்கும் வளமதில் மகிழ்ந்தே
பாடுபடும் வகையில் பயன் பிறர்க்கு
பக்குவம் போதிக்கும் இவையோ
மானுடர்க்கு உணர்த்தும் மதிநுட்பு
மனதார அன்போடு வாழ்ந்திடுவீர்

வானிசன், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பாகம்



சாண்டில்யன்

# கடல் புறா

## நடனமாடினாள்

காலத்தின் பதிவு 37

மேடையில் அவள் சுழன்றாள், சுற்றிச் சுற்றி ஓடினாள், ஆடினாள், பாடினாள், பறந்தாள், தோழிகளைக் கட்டித் தழுவினாள். தலையை நிமிர்த்தி முத்துப் பற்கள் தெரிய நகைத்தாள்.

பின்னணி வாத்தியங்கள் சப்தித்தன. மகிழ்ச்சி உச்சஸ்தாயிக்குப் போய்க் கொண்டிருந்தது.

இளைய பல்லவனைக் கைகளை நீட்டி 'வாவா'வென்று பகிரங்கமாக அழைத்தாள் மஞ்சளழகி. அது நாட்டியத்தில் சுபத்திரை கனவில் அழைக்கும் கட்டமென்பதை அறியாத இளைய பல்லவன் திடீரென இருபிடத்தை விட்டு எழுந்தான். மேடை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தான்.

அவ்வளவுதான், அதுவரை இருந்த அமைதி குலைந்தது. "நில்" என்ற சொல்லொன்று அதிகாரத்துடன் ஒலித்தது. சொல்லுக்குடையவன் பலவர்மனா என்று திரும்பிப் பார்த்தான் இளையபல்லவன்.

பலவர்மன் ஆசனத்தில் பேசாமல் அமர்ந்திருந்தான். அவனுக்குப் பின்னால் பயங்கரத் தோற்றத்துடனும் பார்வையுடனும் நால்வர் நின்றிருந்தார்கள். அவர்களில் ஒருவனிடமிருந்த கத்தியும் அடுத்த விநாடி இளைய பல்லவனை நோக்கி வெகு வேகமாகப் பறந்து வந்தது.

### குறுக்கே புகுந்த குறுவாள்

சீனத்துக் கொள்ளைக்காரனும் கடற்போரில் நிகரற்றவனென்று பிரசித்தி பெற்றவனுமான அகூதாவிடம் ஒரு வருட காலம் பழகியதால் எந்தச் சந்தர்ப்பத்திலும் உணர்ச்சிகளைக் கைவிடாமல் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ளக்கூடிய திறனை எய்தியிருந்த இளைய பல்லவனின் உணர்ச்சிகளையும் மஞ்சளழகியின் நடன மோகனாஸ்திரம் சிதற அடித்து மேடையை நோக்கி அவனை விரையச் செய்துவிட்டதென்றால், அந்த நடனத்தின் சிறப்பையும் மனிதர்களை இஷ்டப்படி வளைக்க அதற்கிருந்த அபூர்வ சக்தியையும் பற்றி விபரிக்கவா வேண்டும்? வேண்டுவதில்லையென்பதை நடனம் துவங்கிய சில நாழிகைக்குள் இளையபல்லவன் புரிந்து கொள்ளத்தான் செய்தான்.

மஞ்சளழகி சோகித்த போது கூட்டமே சோகித்ததும், அவள் மகிழ்ச்சி வெறி கொண்ட போது அவன் கவனிக்கவும் செய்தான்.

அன்று காலை கோட்டைத் தலைவன் அறையில் வாஜாங் நடனத்தைப் பற்றி உணர்ச்சிப் பெருக்குடன் பேசிய மஞ்சளழகி, "இன்றிரவு நான் ஆடும்போது வந்து பாருங்கள் உலகமே ஆடும்;

அங்கு வரும் கள்வர்கள் ஆடுவார்கள்; கொலைகாரர்கள் ஆடுவார்கள்; ஆண்கள், பெண்கள் சகலரும் ஆடுவார்கள். உள்ளங்கள் புரண்டெழும்; உணர்ச்சிகள் அலை பெருக்கும்" என்று கூறியபோது அவள் ஒருவேளை மிகைப்படுத்திக் கூறுகிறாளோ என்று நினைத் இளைய பல்லவன் அந்த நிகழ்ச்சியை நேரிடையாகக் கண்டதும் அவள் சொன்னதெல்லாம் எத்தனை உண்மை என்று எண்ணவும் எண்ணினான்.

அப்படி எண்ணிக் கொண்டே நடனத்தில் மனத்தைப் பறிகொடுத்தவன் கொள்ளைக்காரரும் இதரரும் அவள் ஆட்டத்துக்குச் சரியாக ஆடி வெறி கொண்டதையும் கூச்சலிட்டதையும் கண்டு பெரிதும் பிரமிக்கவும் செய்தான்.

(தொடரும்...)

---


புரூக்ளின் பாலம்

அமெரிக்காவில் நியூயோர்க் மாநிலத்தில் உள்ள பழமையான தொங்குபாலங்களில் புரூக்ளின் பாலமும் ஒன்றாகும். 5,989 அடி (1825மீ) நீளமும் 85 அடி அகலமும் (26மீ) உள்ள இப்பாலம் கிழக்கு ஆற்றின் மீது மேன் ஹேட்டனில் இருந்து புரூக்ளின் வரை கட்டப்பட்டுள்ளது. இது கட்டி முடிக்கப்பட்ட போது இதுவே உலகின் மிகப்பெரிய தொங்குபாலம் ஆகும்.

பிரான்ஸில் விநோதமான நோய் காரணமாக உடலுறுப்புகள் செயலிழந்து கண்கள் மட்டுமே அசையும் நிலையில் படுத்த படுக்கையில் இருந்த ழீன் டொமினிக் என்ற எழுத்தாளர் மெண்ட்லில் எனும் பேச்சுப் பயிற்சி நிபுணத்துவம் மிக்க பெண்ணின் உதவியோடு ஒரு முழு நாவலைப் படைத்தார்.

அந்த நாவல் உருவான வரலாறு பின்னாளில் ஒரு திரைப்படமாக உருவெடுத்தது. வெறும் கண்ணசைவை வைத்துக்கொண்டு தனது கைகளில் ஆங்கில எழுத்துக்கள் தாங்கிய அட்டையை காண்பித்து அந்த எழுத்துக்களை ஒன்று சேர்த்து மெண்டிலிலே எழுத அந்த நாவல் உருவாக்கப்பட்டது.

அதைப்போலவே புரூக்ளின் பாலம் கட்டுவதன் பின்னால் ஒரு உருக்கமான, கவித்துவமான, நெகிழ்ச்சியான சம்பவம் உண்டு.



# உலகின் தொழில்திறன் அதிசயங்கள் பகுதி -3

1883 ஆம் ஆண்டு ஜான் அகஸ்டஸ் ரூப்ளிங் என்ற பொறியாளர் கிழக்கு நதியின் மேல் இரும்புக்கம்பிகளின் உதவியுடன் மிக நீளமான தொங்கு பாலம் கட்ட முடிவெடுத்தார்.

பாலம் கட்டுவதில் கைதேர்ந்த பல பொறியாளர்கள் இது முடியாத காரியம் இதை கைவிடுவதுதான் சரியான முடிவு என்றனர். ஆனால் ஜான் அகஸ்டஸ் ரூப்ளிங் தன்னால் இதை கண்டிப்பாகக் கட்ட முடியும் என்று நம்பினார்.

ஜான் அகஸ்டஸ் ரூப்ளிங் ஜேர்மனியில் உள்ள பிரஷ்யாவில் முஹிஹாஸன் என்னும் ஊரில் 1806 ஆம் ஆண்டு பிறந்தார். சிறுவயது முதலே கணிதம் மற்றும் அறிவியலில் அதிக ஆர்வம் கொண்ட அவரை கட்டடவியல் துறையில் படிக்க வைத்தனர். அதற்குப் பிறகு ஹைட்ராலிக்ஸ் தொழில்நுட்பம் பற்றியும் படித்தார். ஆச்சரியகரமாக தத்துவியலில் நாட்டம் கொண்டு ஹெகலிடம் அது பற்றிக் கற்றார்.

பின்னர் அதுவே அவரை 1000 பக்கம் கொண்ட பூமியின் தோற்றம், அமைப்பு குறித்த ஆய்வு அறிக்கை ஒன்றை உருவாக்கத் தாண்டியது. 1831 ஆம் ஆண்டு தனது இரு சகோதரர்களுடன் அவர் அமெரிக்காவுக்கு சென்றார். அங்கேயே பொறியியல் சார்ந்த பல தொழில்களில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

அமெரிக்காவின் நீர்ப்பாசன கட்டுமானங்கள், கால்வாய் வெட்டும் பணிகளில் இவரது பங்கு இருந்தது. குறிப்பாக பென்சில்வேனியா மாகாண மக்களுக்காக ஹாரிஸ்பர்க்குக்கும் பிட்ஸ்பர்க்குக்கும் இடையே அலிகேனி மலைத்தொடர் வழி யாக அமைக்கப்பட்ட கடினமான ரயில் பாதை பணிகளில் மூன்று ஆண்டுகள் பணிபுரிந்தார். தொடர்ந்து அவரது கவனம் தொங்கும் பாலங்கள் அமைக்கும் பணியில் திரும்பியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

313

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஆரோக்கிய விதிமுறைகள்

சுகதேகி எனக் கருதிக் கொள்ளும் ஒவ்வொருவரும் சில அடிப்படை ஆரோக்கிய விதிகளை கடைப்பிடித்து வருவார்களாக இருந்தால் அவர்கள் தொட ர்ந்தும் ஆரோக்கியமாக வர முடியும். அந்த அடிப்படை ஆரோக்கிய வழிமுறைகளாவன,

. எங்கள் குருதி அமுக்கத்தை அளந்து பார்த்துக் கொள்ள வேண்டும். அது 130/80 என்ற மட்டத்திற்கு மேற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

. எங்கள் குருதி குளுக்கோஸின் அளவை பரிசோதித்துப் பார்த்துக் கொள்வோம். எட்டு மணி நேரம் உணவு, தேநீர் உட்கொள்ளாது சோதித்துப் பார்க்கப்படும் குருதி குளுக்கோஸின் அளவு 110 mg/dl இற்கு மேற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

. பால், முட்டை என்பன ஆபத்தான உணவுகளல்ல. ஆரோக்கியமான நிறை உணவுகள் என்பதை மனதில் நிறுத்துவோம்.

. எங்கள் உடல் நிறையை அளந்து பார்த்துக் கொள்வோம். எங்களுக்கு இருக்க வேண்டிய ஆரோக்கியமான நிறை எவ்வளவு என்பதை அறிந்து வைத்திருப்போம். அது எமது உயரத்தில் தங்கி இருக்கிறது.

. தினமும் எங்களுடைய நாளாந்த வேலைகளுக்கு மேலதிகமாக 30 நிமிட நேரத்தை உடற்பயிற்சிக்கு ஒதுக்கிக் கொள்வோம்.

. மூன்று வேளை உணவுடனும் ஏதாவது இலைவகை மரக்கறிகளைச் சேர்த்துக் கொள்வோம். பழங்களை உணவு உண்பதற்கு பத்து நிமிடங்கள் முன்னதாக உண்ணுவோம். இது நாங்கள் உண்ணும் உணவின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கு உறுதுணையாக அமையும்.

. தினமும் குறிப்பிட்ட அளவு நேரத்தை மகிழ்வாகவும் ஓய்வாகவும் இருப்பதற்கு ஒதுக்கிக் கொள்வோம். மனதிற்கு மகிழ்வான விடயங்களை பேசுவதில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்வோம். மன்னிக்க பழகுவோம்.

. இயற்கையான உணவுகளை சமைத்து உண்பதில் அக்கறை செலுத்துவோம். செயற்கையான சத்துமா, குளிசைகள், ரொனிக் வகைகள் போன்றவற்றில்தான் உண்மையான சத்து இருக்கிறது என்ற மாயையிலிருந்து விடுபடுவோம். போதுமான அளவு தூயநீர் அருந்துவோம்.

. வீட்டுச் சுற்றாடல் சுத்தமாகவும் காற்றோட்டம் உள்ளதாகவும் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம். உறங்கும் பொழுது தூயகாற்று உள்நுழைவதற்காக யன்னல்களை திறந்து வைத்து உறங்குவோம்.

. வீட்டிலே குளிர்ச்சியான மரங்களை நாட்டி வளர்ப்போம். இவை எமக்கு ஒட்சிசனையும் ஈரலிப்பையும் குளிர்ச்சியையும் வழங்கும்.

. எமது உடலில் ஏதாவது அசாதாரண அறிகுறிகள் தென்பட்டால் அருகில் உள்ள மருத்துவமனையில் காட்டி ஆலோசனை பெறுவோம்.

. ஆரோக்கிய உணவு முறை என்பதன் அர்த்தத்தைப் புரிந்து அதனை நடைமுறைப்படுத்த முயலுவோம். உணவுக்கோப்பையின் அரைப்பங்கு மரக்கறி வகைகளாகவும் கால்பங்கு மாப்பொருளாகவும் (சோறு, இடியப்பம், பிட்டு) கால்பங்கு புரதமாகவும் (முட்டை, பருப்பு, மீன், இறைச்சி,கௌபி, பயறு, றால்) இருப்பதை உறுதி செய்து கொள்வோம்.

. இரசாயனம் சேர்க்காத, மருந்து அடிக்காத இயற்கையான உணவுகளுக்கு முன்னுரிமை கொடுப்போம். உதாரணம் - முருங்கை இலை, மீன், முட்டை, பால், வாழைப்பூ,வாழைக்காய், முருங்கைக்காய், இயற்கையான கீரை வகைகள், கொய்யா, விளாம்பழம், தேசிக்காய், மரவள்ளி, வற்றாளை,பயறு, கௌபி, கச்சான், கடலை, தயிர், மோர், போன்றவை ஆகும்.

. சரியான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை மட்டும் மக்களிடையே பரப்புவோம்.

.. புகைத்தல், குடிவகை பாவித்தல், போதைப்பொருள் பாவனை என்பவற்றை முற்றாக தவிர்ப்போம்.

**சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்.**

# மன அழுத்தத்தால் புற்றுநோய் ஆபத்து



இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் புற்றுநோய் பாதிப்பில்லாத ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர்களில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் குறைந்த அளவு மன உளைச்சல் அடைந்தவர்களை விட மன உளைச்சலால் அதிக பாதிப்படைந்தவர்களுக்கு பல வகையான புற்று நோய்களால் ஏற்படும் உயிர் ஆபத்து மூன்று பங்கு அதிகமுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

குடல், விந்துப்பை , கணையம் மற்றும் உணவுக்குழாய் ஆகியவற்றில் உண்டாகும் புற்றுநோய் ஆபத்து இவர்களுக்கு அதிகமுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இது குறித்த ஒரு திட்டவட்டமான காரண இணைப்பை உருவாக்க மேலும் அதிக ஆய்வுப் பணி தேவைப்படுகிறது என பி.எம்.ஜே என்றழைக்கப்படும் பிரிட்டிஷ் மருத்துவ இதழில் ஆராய்ச்சியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

**நித்திலம்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் - 2023
# கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2023.C1.01- 2023.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2022.10.25 - 2022.11.08
(அலுவலக நாட்களில் மு.ப 09.00 - பி.ப 01.00)
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2022.11.09 புதன்கிழமை மு.ப 10.00 மணி
கேள்வி திறக்கும் திகதி :- 2022.11.09 புதன்கிழமை மு.ப 10.00 மணி
கேள்வி திறக்கும் இடம் :- கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம்.

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2022.11.09 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 2022.11.09 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விகாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| | **சேவைச்சந்தை -கிளிநொச்சி** | | | |
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மீன் | 50,000.00 | 1,000.00 | 3,337,247.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மரக்கறி | 100,000.00 | 1,000.00 | 5,951,110.00 |
| 3 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை பழம், வெற்றிலை, பாக்கு | 25,000.00 | 1,000.00 | 1,742,400.00 |
| 4 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை தேங்காய் | 25,000.00 | 1,000.00 | 2,750,000.00 |
| 5 | கிளிநொச்சி சந்தை துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 60,000.00 | 1,000.00 | 3,894,000.00 |
| 6 | கிளிநொச்சி சந்தை இல.1 கோழி இறைச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 3,850,440.00 |
| 7 | கிளிநொச்சி சந்தை இல.2 கோழி இறைச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 3,667,400.00 |
| 8 | கிளிநொச்சி மாட்டிறைச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 3,346,200.00 |
| 9 | கிளிநொச்சி ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 562,100.00 |
| 10 | கிளிநொச்சி சேவைச்சந்தை பொதுமலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 52,184.00 |
| | **கிளிநகர்ப் பகுதி** | | | |
| 1 | கிளிநொச்சி சிறுவர் பூங்கா அருகில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் | 10,000.00 | 1,000.00 | 708,400.00 |
| 2 | கிளிநொச்சி பசுமைப் பூங்கா அழகுக்கலை நிலையம் | 1,000.00 | 1,000.00 | 26,532.00 |
| 3 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 2,000.00 | 1,000.00 | 114,304.00 |
| 4 | மருதநகர் இயற்கை பூங்கா | 1,000.00 | 1,000.00 | 32,450.00 |
| | **பொதுச்சந்தை - பரந்தன்** | | | |
| 1 | பரந்தன் சந்தை | 1,000.00 | 1,000.00 | 54,850.00 |
| 2 | பரந்தன் மாட்டிறைச்சிக்கடை | 15,000.00 | 1,000.00 | 935,000.00 |
| 3 | பரந்தன் கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 266,200.00 |
| 4 | பரந்தன் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 68,750.00 |
| | **பொதுச்சந்தை - வட்டக்கச்சி** | | | |
| 1 | வட்டக்கச்சி சந்தைதொகுதி | 3,000.00 | 1,000.00 | 170,500.00 |
| 2 | வட்டக்கச்சி மாட்டிறைச்சிக்கடை | 8,000.00 | 1,000.00 | 610,940.00 |
| 3 | வட்டக்கச்சி கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 381,700.00 |
| 4 | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 316,800.00 |
| 5 | இராமநாதபுரம் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 186,804.00 |
| 6 | இராமநாதபுரம் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 49,720.00 |
| | **பொதுச்சந்தை- இரணைமடு** | | | |
| 1 | இரணைமடு சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 88,000.00 |
| 2 | இரணைமடு மாட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,312,300.00 |
| 3 | இரணைமடு கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 469,833.00 |
| | **கனகாம்பிகைக்குளம்** | | | |
| 1 | கனகாம்பிகைக்குளம் சிறுவர் பூங்கா | 1,000.00 | 1,000.00 | 4,356.00 |
| | **பொதுச்சந்தை - உருத்திரபுரம்** | | | |
| 1 | D10 உருத்திரபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 10,434.00 |
| 2 | D10 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 327,030.00 |
| 3 | D10 உருத்திரபுரம் கோழியிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 165,550.00 |
| 4 | D8 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 292,050.00 |
| | **பொதுச்சந்தை - ஸ்கந்தபுரம்** | | | |
| 1 | ஸ்கந்தபுரம் சந்தை தொகுதி | 5,000.00 | 1,000.00 | 271,543.00 |
| 2 | ஸ்கந்தபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 563,750.00 |
| 3 | ஸ்கந்தபுரம் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 189,750.00 |
| | **பொதுச்சந்தை - தருமபுரம்** | | | |
| 1 | தருமபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 56,973.00 |
| 2 | தருமபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 578,600.00 |
| 3 | தருமபுரம் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 155,100.00 |
| | **பொதுச்சந்தை- கல்லாறு** | | | |
| 1 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 51,963.00 |
| | **பொதுச்சந்தை- ஜெயந்திநகர்** | | | |
| 1 | ஜெயந்திநகர் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 537,020.00 |
| 2 | ஜெயந்திநகர் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 268,400.00 |
| | **பொதுச்சந்தை- ஊற்றுப்புலம்** | | | |
| 1 | ஊற்றுப்புலம் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 212,850.00 |
| | **பொதுச்சந்தை- ஆனைவிழுந்தான்** | | | |
| 1 | ஆனைவிழுந்தான் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 123,200.00 |
| | **வன்னேரிக்குளம்** | | | |
| 1 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 1,000.00 | 1,000.00 | 52,910.00 |
| | **பொதுச்சந்தை- கண்டாவளை** | | | |
| 1 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 35,200.00 |
| | **பொதுச்சந்தை- முரசுமோட்டை** | | | |
| 1 | முரசுமோட்டை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 147,950.00 |
| 2 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 45,118.00 |
| | **பொதுச்சந்தை- அக்கராயன்** | | | |
| 1 | அக்கராயன் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 65,748.00 |
| | **பொதுச்சந்தை- புன்னைநீராவி** | | | |
| 1 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 198,000.00 |
| 2 | புன்னைநீராவி கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | 160,220.00 |

## நிபந்தனைகள்

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்தத் தவறியவர்களும், கறுப்பு பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
4. கேள்விகாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும்போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப் பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப் பிரதி என சான்றுப்படுத்தி சமர்ப்பிப்பதுடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப் பத்திரம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
7. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை குறித்த காலத்திற்குள் (ஆகக்கூடியது ஒரு வார காலத்தினுள்) செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
8. இறைச்சி கடைகள், சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். குத்தகைகாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
9. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அம்மாத இறுதிக்குள் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப்பணத்தையும் காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 15% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
10. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைக் கட்டணங்கள் செலுத்தத் தவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.
11. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை, இறைச்சி கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச்செல்ல முடியும். பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணத்திற்காகவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.
12. துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 10.00 உம், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 20.00 உம், முச்சக்கர வண்டி, ஹயஸ் போன்ற சிறிய ரக வாகனங்களுக்கும் கனரக வாகனங்களுக்கும் ரூபா 50.00 உம் மட்டுமே அறவிடமுடியும்.
13. அனைத்து தராசுக்கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது தற்போது பாவனையிலுள்ளவாறு 3% வரியினையே அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
14. கிளிநகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு, ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் (அதி விஷேசமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.
15. ஆரம்பக்கேள்வி தொகையை விட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
16. சபையால் கட்டப்பட்ட கடைகள் காணப்படாதவிடத்து சபையால் கடை கட்டப்படும் வரை தற்காலிக கடை குத்தகைதாரராலேயே கட்டப்பட வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்காது என்பதுடன் சபையால் கடை கட்டி வழங்கப்படவில்லை என்ற காரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டணத்தில் விலக்களிப்போ, குறைப்பனவோ வழங்கப்படமாட்டாது.
17. இறைச்சிக் கடைக்குரிய மாதாந்த இடவாடகை கட்டணமாக ரூபா 1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்குச் செலுத்த வேண்டும்.
18. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக பிரதேச சபை தவிசாளர்/செயலாளரினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைகாரர் கடைப்பிடிக்க வேண்டும்.
19. மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் வர்த்தமானிகள், சுற்றுநிருபங்களுக்கு அமைய சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.
20. இந் நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராகவோ தவிசாளர்/செயலாளருக்கெதிராகவோ நீதிமன்ற நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளமுடியாது.

தவிசாளர்,
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

(C1128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவை இன்றும் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை மற்றும் மத்திய போக்குவரத்து அமைச்சு ஆகியவற்றின் நெறிப்படுத்தலில் வட மாகாண மற்றும் மத்திய மோட்டார் போக்குவரத்து திணைக்களங்கள் இணைந்து நடத்தும் "வீதி ஒழுங்குகளைப் பேணிப் பாதுகாப்பாக பயணிப்போம்" எனும் தொனிப்பொருளில் நடமாடும் சேவை நேற்று சனிக்கிழமை ஆரம்பமானது.



கைதடியிலுள்ள வடக்கு மாகாணசபை வளாகத்தில் நேற்று ஆரம்பித்த நடமாடும் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் நிசாந்த அனிருத்த வீரசிங்க, மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர், வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் சுஜீவா சிவதாஸ், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம்.பற்றிக் டிரஞ்சன், யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நடமாடும் சேவையின் ஊடாக மாற்றுத்திறனாளிகள் மற்றும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கையையும் இலகுவாக ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என வட மாகாண மோட்டார் போக்குவரத்துத்திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். (நி-33)



## செப்பனிடாத பாதையில் தேங்கும் வெள்ளநீர்

### மக்கள் விசனம்

(கரணவாய்)

மந்திகை பகுதியில் வீதியின் நடுவே வெள்ளமும் மருங்கில் பற்றைக் காடும் வளர்ந்து இருக்கும் நிலையில் அவை தொடர்பில் யாரும் கவனம் செலுத்தவில்லை என பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

புலோலி- கச்சாய் வீதி புனரமைப்பின் போது புலோலி- சாவகச்சேரி வீதியின் சுமார் 300 மீற்றர் பகுதி செப்பனிடப்பட்டு காப்பற்றாக மாற்றப்பட்டுள்ளது.

மந்திகை சந்தி வரையான சுமார் 50 மீற்றர் வீதி செப்பனிடப்படாத காரணத்தால் மந்திகை சந்தியில் இருந்து பாய்ந்தோடி வரும் நீர் வீதியின் நடுவே வெள்ளமாக காணப்படுகின்றது. அதற்கு அருகாக உள்ள வீதி மருங்கில் உள்ள பற்றைகளும் நீண்டு வளர்ந்து வீதி சமிக்ஞை குறியீடுகளையும் மூடி காணப்படுகிறது.

எனவே இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-60)

## இலங்கைத் தமிழர்கள் மூவர் தனுஷ்கோடியில் தஞ்சம்

(சென்னை)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவர் நேற்று சனிக்கிழமை காலை கடல் மார்க்கமாக தனுஷ்கோடியில் தஞ்சமடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 இலங்கைத் தமிழர்கள் தனுஷ்கோடி அடுத்துள்ள மூன்றாம் மணல் திட்டில் தவித்து வருவதாக கிடைத்த தகவலையடுத்து மரைன் பொலிஸார் படகில் சென்று மீட்டு தனுஷ்கோடி அழைத்து வந்தனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களின் எண்ணிக்கை 184 ஆக உயர்ந்துள்ளது. (நி)

## மீண்டும் அதிகரிக்கும் மின்சாரக் கட்டணம்?

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய சபை கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை மின்சார சபை 12 பில்லியன் ரூபாய் வரை நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் இந்த நட்டத்தை தவிர்த்துக்கொள்வதற்கு மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். கடந்த ஓகஸ்ட் மாதம் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 260 | 220 | 250 | 300 |
| தக்காளி | 300 | 300 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 180 | 200 | 200 |
| கோவா | 250 | 250 | 320 | 300 |
| கரட் | 250 | 380 | 400 | 450 |
| பூசணி | 200 | 180 | 180 | 200 |
| புடோல் | 250 | 230 | 280 | 300 |
| வாழைக்காய் | 150 | 140 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 480 | 480 | 500 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 250 | 200 | 250 |
| பாகற்காய் | 600 | 650 | 550 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 400 | 350 | 300 |
| லீக்ஸ் | 260 | 380 | 260 | 350 |
| பீற்றூட் | 160 | 250 | 300 | 300 |
| கறிமிளகாய் | 550 | 650 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 600 | 400 |
| போஞ்சி | 250 | 350 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 200 | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 60 | 120 | 100 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 65-70 | 70-90 |
| இராசவள்ளி | 230 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 450 | 450 |
| முள்ளங்கி | 100 | 150 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 30 | 100 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 80 | 120 |

## இரட்டை குடியுரிமை உள்ளவர்களை பாராளுமன்றிற்கு அனுமதிக்கக் கூடாது

### அதற்காகவே 22 இற்கு ஆதரவாக வாக்களித்தேன் என்கிறார் பொன்சேகா

(கொழும்பு)

இரட்டை குடியுரிமை உள்ளவர்களை பாராளுமன்றத்திற்கு அனுமதிப்பதை தடுக்கும் சரத்துக்கு தான் மிகவும் விருப்பத்துடன் வாக்களித்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

22 ஆவது திருத்தம் ஒவ்வொரு நபரின் விருப்பத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இருபத்திரெண்டாவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் வினவியபோதே சரத் பொன்சேகா மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். (நி)

கிளிநொச்சி தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையில் பயிற்சியை நிறைவு செய்த பயிலுநருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.




கிளிநொச்சி தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. தொழில் தகைமை பயிற்சியை நிறைவு செய்த 48 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. குறித்த நிகழ்வில் தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் தலைவர் கலந்து கொண்டு பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் பார்வை அற்றவன் குருடன் அல்ல. தன் குற்றங்களை உணராதவன் குருடன்.
– மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உள்ளூராட்சி சபைகளின் பலயீனம் கண்டோம்

வடபகுதியில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்கள் ஏராளம்.

இந்தக் குற்றச்சாட்டுக்களைக் கடந்து, சில துறைகளில் சில உள்ளூராட்சி அமைப்புகள் சாதனை படைத்துள்ளன என்பதையும் இங்கு ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆனால் வடபகுதியில் இயங்கக்கூடிய ஒட்டுமொத்த பிரதேச, நகர, பட்டின, மாநகர சபைகளும் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதிலும் தெருக்களில் குப்பைகூழங்கள் கொட்டப்படுவதைத் தடுப்பதிலும் தங்களின் இயலாமையை நிரூபித்துள்ளன என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இதில் வடபகுதியில் தெருநாய்களின் தொல்லை சொல்லிமாளா.

வீதி விபத்துக்கள், உயிரிழப்புகள், விசர் நாய்க்கடி என ஏகப்பட்ட பிரச்சினைகள் தெருநாய்களால் ஏற்படுகின்றன.

இதற்கு மேலாக, அடிப்படைப் பண்பு இல்லாதவர்கள் – மனிதநேயம் இம்மியும் கிடையாதவர்கள் – பாவபுண்ணியம் என்ற அறக்கோட்பாட்டை அறவே தெரியாதவர்கள் தங்கள் வீட்டுக் குப்பைகளையும் கழிவுகளையும் உரப்பைகளில் கட்டி வந்து, தெருக்களில் கொட்டிவிட்டுப் போகின்றனர்.

இவ்வாறு தெருக்களிலும் சந்திகளிலும் கொட்டப்படுகின்ற குப்பைகளை தெருநாய்கள் கிண்டிக்கிளறி, கடித்துக்குதறி அந்தப் பகுதி முழுவதையும் அசுத்தப்படுத்திவிடுகின்றன.

எனினும் தெருநாய்கள் தொடர்பிலும் தெருக்களில் குப்பை கொட்டுகின்றவர்களின் விடயத்திலும் உள்ளூராட்சி அமைப்புகள் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கத்தவறியுள்ளன.

தெருநாய்களைக் கட்டுப்படுத்துங்கள் என மருத்துவர்களும் பொது அமைப்புகளும் பல தடவைகள் கோரிக்கைவிடுத்தும் அதற்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது போல உள்ளூராட்சி அமைப்புகள் நடந்து கொள்கின்றன.

நிலைமை இதுவாக இருக்கையில், தெருக்களில் குப்பை கொட்டுகின்றவர்கள் தொடர்பில் தகவல் தருபவர்களுக்குச் சன்மானம் தரப்படும் என்று யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளமை முன்னேற்றகரமான செயற்பாடு எனலாம்.

ஆம், தெருக்களில் குப்பை கொட்டுபவர்களை நீதிமன்றில் நிறுத்தி அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கினாலன்றி மேற்குறித்த நபர்களை ஒருபோதும் திருத்த முடியாது.

ஆக, தெருநாய்களைப் பிடித்து நாய்கள் காப்பகங்களில் ஒப்படைத்தல், தெருக்களில் குப்பை கொட்டுகின்றவர்களை நீதிமன்றில் நிறுத்துதல் ஆய இரண்டு பணிகளையும் உள்ளூராட்சி சபைகள் வெற்றிகரமாகச் செய்தால் அது பொதுமக்களுக்குச் செய்கின்ற மிகப்பெரும் பணியாக இருக்கும்.

# 22 ஆவது திருத்தத்தை ஆதரித்தாலும் 21 ஆவது திருத்தமே நாட்டுக்கு சிறந்தது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

22 ஆவது திருத்தத்தை ஆதரித்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள 21 ஆவது திருத்தமே நாட்டுக்கு சிறந்தது எனவும், அப்படியொரு நல்ல விடயம் இருந்தும் 22 ஆவது திருத்தத்தை கோட்டாபயவின் சர்வாதிகாரத்தை தோற்கடிப்பதற்காகவே ஆதரித்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் திவுலபிட்டிய தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் நேற்று உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சிக்காகவே 22 ஆவது திருத்தத்திற்கு ஆதரவளித்தோமேயன்றி மனிதஉரிமைகள்ஆணைக்குழுவின் தலைவர் திருமதி ரோஹினி மாரசிங்கவையோ அல்லது தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சி ஹேவாவையோ வீட்டுக்கு அனுப்புவதற்காக அல்ல என்றும் இவ்வாறான தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் எனவும் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், அவ்வாறு செயற்பட முற்பட்டால் எந்நேரத்திலும் மக்களுடன் இணைந்து வீதியில் இறங்குவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், ராஜபக்ஷக்களின் அடிமையாக வாழ்ந்த வாழ்க்கையை விட்டொழிக்க மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்,இந்த நாட்டில் சுதந்திர மனிதனாக வாழவழி செய்வதாக தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், ராஜபக்ஷவினர் இன்னும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிப்பதாகவும் அவ்வாறான நிலைமை ஏற்பட இடமளிக்காமல் பாதுகாப்பது மக்களின் பொறுப்பு என்றும், ராஜபக்ஷவினர் தமது குடும்பத்தில் ஒருவரை மீண்டும் ஜனாதிபதியாக்க முயல்வதாகவும், இது மீண்டும் நாட்டை அழிப்பதற்கான முயற்சி எனவும் அவர் தெரிவித்தார்.

எந்த மனிதருக்கும் எந்த வேலையும் செய்ய முடியாத காலம் வரும் எனவும், உடல் பலமும், மனவலிமையும் குறைந்துள்ளதை உணர்ந்து, மக்கள் நிராகரிக்க முன் அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும் என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அதிகார மோகம் தன்னிடம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இத்தருணத்தில் நாட்டில் பணவீக்கம், வாழ்க்கைச் சுமை, ஊட்டச்சத்து குறைபாடு, பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும், ஒட்டுமொத்த நாட்டு மக்களும் அவதிப்பட்டு வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், இவ்வாறான நிலையில் அரசாங்கம் பொருளாதாரத்தையும், தேவைகளையும் சுருங்கச் செய்வதாகவும், பொருளாதாரத்தையும் தேவையையும் அழித்து, மக்களின் வாழ்வாதாரத்தையும் அழித்து வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவர முயல்வதாகவும், அது தவறான செயல் எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், 1988 காலப்பகுதியில் நாட்டில் 2 யுத்தங்கள் இடம்பெற்ற போதும் எவருக்கும் தலைசாய்க்காது தைரியத்துடன் சர்வதேச உறவுகளை சரியாகப் பயன்படுத்தி நாட்டைக் கட்டியெழுப்பு நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், தற்போதைய ஆட்சியாளர்கள் முறையான கொடுக்கல் வாங்கல் சட்டங்களுக்கு புறம்பாக வெறுமனே கொடுங்கள் என்ற கருத்தை முன்னிலைப்படுத்தி, திரிந்து வங்குரோத்து நாட்டை மேலும் வங்குரோத்தான நிலைக்கு தள்ள முயல்வது தேசிய அவலமாகும் என்றும், டொலரை கொண்டு வரும் சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பத் துறைகளுக்கு வரி விதிக்கப்படுவதாகவும், தற்போதைய அரசின் நரம்பு மண்டலம் சரியாக வேலை செய்யாது குழப்பம் நிறைந்ததாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ம-7)

## தனியார் வங்கிக்குள் புகுந்த சொகுசு கார்

தனியார் வங்கி ஒன்றின் சுவரை உடைத்துக் கொண்டு நேற்று சொகுசு கார் ஒன்று புகுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கஹவத்தை நகரில் நேற்று காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளதுடன், எவருக்கும் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை.

விபத்தில் வங்கி கடுமையாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வங்கிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வங்கியின் படிக்கட்டுகள் ஊடாக முன்னோக்கி சென்று வங்கியினுள் புகுந்துள்ளது.

குறித்த காரை பல் மருத்துவர் ஒருவர் செலுத்திச் சென்றுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## நிலக்கரி தாங்கிய கப்பல் அடுத்த வாரம் நாட்டுக்கு

(கொழும்பு)

நிலக்கரி தாங்கிய கப்பல் ஒன்று, எதிர்வரும் 25 ஆம் திகதி நாட்டிற்கு வருகை தரவுள்ளதாக, நிலக்கரி நிறுவன பொது முகாமையாளர் நாமல் ஹேவகே தெரிவித்துள்ளார்.

நிலக்கரி கொள்வனவு தொடர்பில், ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனத்திடம் இருந்து, நிலக்கரி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. நிலக்கரி கப்பலொன்று எதிர்வரும் 25 ஆம் திகதி நாட்டிற்கு வருகை தந்ததை தொடர்ந்து, தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

அத்துடன், நிலக்கரி கிடைக்கப் பெற்றதும், நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலைய செயல்பாடுகளை, தடையின்றி முன்னெடுக்க முடியும்.

என நிலக்கரி நிறுவன பொது முகாமையாளர் நாமல் ஹேவகே குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பாராளுமன்றை பார்வையிட மாணவர்களுக்கு வாய்ப்பு

பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறும் தினங்களில் பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்கும் பாராளுமன்ற விவாதங்களை பார்வையிடுவதற்கும் பாடசாலை மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ முன்வைத்த யோசனைக்கு பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு அனுமதிவழங்கியுள்ளது.

இதற்கமைய, பாராளுமன்றத்தில் உள்ள பொது மக்கள் கலரியிலிருந்து பாராளுமன்ற விவாதங்களை பார்வையிட பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்புக் கிட்டவுள்ளது.

COVID சூழல் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் கடந்த செப்டம்பர் 20 ஆம் திகதி முதல் தளர்த்தப்பட்டிருந்த போதும், பாராளுமன்ற அமர்வு நாட்களில் பார்வையிடுவதற்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த கட்டுப்பாடுகளும் தற்போது தளர்த்தப்பட்டுள்ளன. இதனால் பாடசாலை அதிகாரிகள் தமது விண்ணப்பத்தை படைக்கல சேவிதருக்குக் கடிதம் மூலம், 0112777473 அல்லது 0112777335 எனும் தொலைநகல் மூலம் அல்லது www.parliament.lk என்ற இணையவழியூடாக சமர்ப்பிக்க முடியும். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அரசிற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 60 பேர் சுட்டுக் கொலை

## ஆபிரிக்க நாட்டில் துயரச் சம்பவம்

(என்டிஜாமேனா)

ஆபிரிக்க நாடான சாத்தில் ஆளும் அரசுக்கு எதிராக பொது மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அந்நாட்டு தலைநகர் என்டிஜாமேனாவில் போராட்டக்காரர்கள் தடையை மீறி பேரணியாக செல்ல முயன்றனர்.



இதையடுத்து அவர்கள் மீது அந்நாட்டு பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இத் துப்பாக்கிச்சூட்டில் 30 பேர் பலியாகியுள்ளதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, அந்த நாட்டின் 2 ஆவது பெரிய நகரமான மவுண்டோவில் போராட்டம் நடத்தியவர்கள் மீதும் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

அதிலும், 30 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# காலாவதியான 100 மில்லியன் தடுப்பூசிகள் அழிப்பு

(டில்லி)

காலாவதியான 100 மில்லியன் கொவிட்-19 தடுப்பூசி டோஸ்கள் அழிக்கப்பட்டுள்ளதாக இந்திய தடுப்பூசி தயாரிப்பு நிறுவனமான சீரம் இன்ஸ்டிடியூட் ஒஃப் இந்தியா தெரிவித்துள்ளது.

குறைந்த தேவை காரணமாக கடந்த ஆண்டு டிசெம்பரில் கோவிஷீல்ட் உற்பத்தியை நிறுவனம் நிறுத்தியது என்று தலைமை நிர்வாக அதிகாரி ஆதார் பூனவல்லா தெரிவித்தார். (நி)

# ஒவ்வொரு ஆண்டும் பூமியை விட்டு விலகும் நிலா

பூமியிலிருந்து நிலவு ஒவ்வொரு ஆண்டும் 3.8 செ.மீற்றர் தூரம் விலகிச் செல்வதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பூமி சூரியனை சுற்றுவது போல் நிலா பூமியை சுற்றி வருவது வழக்கம். இவ்வாறான நிலையில் நிலா பூமியை விட்டு விலகி செல்வதாக அதிர்ச்சித் தகவலொன்றினை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு பூமியை விட்டு நிலா விலகிச் செல்வதனால் பூமிக்கும் நிலவுக்குமான தூரம் படிப்படியாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பூமியிலிருந்து நிலவு, ஒவ்வொரு ஆண்டும் 3.8 செ.மீற்றர் விலகிச்செல்வதாகவும் இந்த நிகழ்வு பல பில்லியன் ஆண்டுகளாக நடந்து வருவதாகவும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பூமிக்கும் நிலவுக்கும் இடையிலான தூரம் மாறுபடுவதால், பருவநிலையில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

நிலா தோன்றிய போது 14 ஆயிரம் மைல் தொலைவில் பூமிக்கு மிக அருகில் இருந்ததாகவும் தற்போது 2 இலட்சத்து 50 ஆயிரம் மைல் தூரம் விலகிச்சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (நி)

## இந்தோனேசியாவில்

# பாணி மருந்தினால் உயிரிழந்த சிறுவர்களின் எண்ணிக்கை 133 ஆக அதிகரிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் மருந்துவ சிரப்பில் உள்ள தீங்கு விளைவிக்கும் பொருட்களுடன் தொடர்புடைய கடுமையான சிறுநீரக காயத்தால் (AKI) இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை, முன்னர் அறிவிக்கப்பட்ட 100 இறப்புகளில் இருந்து 133 ஆக உயர்ந்துள்ளது என்று நாட்டின் சுகாதார அமைச்சர் குணாடி சாதிகின் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசிய சுகாதார அதிகாரிகள் இந்த வாரம் கடுமையான சிறுநீரக காயத்திலிருந்து குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கையில் ஜனவரி முதல் விபரிக்க முடியாத அதிகரிப்பு குறித்து விசாரித்து வருவதாகவும் அனைத்து சிரப் அடிப்படையிலான மருந்துகளின் விற்பனை மற்றும் பரிந்துரைகளை தற்காலிகமாக தடை செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (நி)


# இம்ரான்கான் தேர்தலில் போட்டியிட முடியாது

## ஐந்து ஆண்டுகள் தடைவிதித்து தீர்ப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கானுக்கு தேர்தலில் போட்டியிட, ஐந்து ஆண்டுகள் தடை விதித்து அந்நாட்டு தேர்தல் ஆணையம் தீர்ப்பளித்துள்ளது.

அதிகாரத்தில் இருந்தபோது வெளிநாட்டுத் தலைவர்களிடமிருந்து பெற்ற பரிசுகள் குறித்து அதிகாரிகளைத் தவறாக வழிநடத்தியதாக குறித்த தடை இம்ரான்கானுக்கு விதிக்கப்பட்டுள்ளது.



பாகிஸ்தானில், 2018 இல் நடந்த பொதுத் தேர்தலில், தெஹ்ரீக் - இ - இன்சாப் கட்சி தலைவர் இம்ரான் கான் நாட்டின் பிரதமராக பதவியேற்றார்.

பின்னர், நம்பிக்கை இல்லா தீர்மானத்தில் தோல்வியடைந்ததை அடுத்து இம்ரான் ஆட்சி கவிழ்ந்து பதவி விலகினார்.

இந்நிலையில் இம்ரான்கான், தவறான பிரமாணப் பத்திரத்தை சமர்பித்ததாகவும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் மற்ற நாடுகளின் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டு பிரமுகர்களிடம் இருந்து பெறப்பட்ட அரச பரிசுப்பொருட்களை சட்டவிரோதமாக விற்றதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பான தோஷகானா வழக்கில் இம்ரான் கானின் வழக்கறிஞர் அலி ஜாபர், 2018-19 இல் பரிசுப்பொருட்களை விற்றதாக ஒப்புக் கொண்டுள்ளார்.

அரச அதிகாரிகளால் பெறப்பட்ட பரிசுகள் தோஷகானாவில் உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும். அவற்றின் மதிப்பை மதிப்பிட வேண்டும். மதிப்பீட்டுக்கு பின்னரே குறிப்பிட்ட தொகையை டெப்பாசிட் செய்த பிறகு, பரிசுப்பொருட்களை விரும்பினால் எடுத்துச் செல்ல முடியும்.

ஆனால் இம்ரான்கான் பதவி விலகியதை அடுத்து கடந்த ஒகஸ்டில் அரச கருவூலத்தில் இருந்து தோஷகானாவிற்கு பணம் செலுத்தாமல் சில பரிசுப்பொருட்களையும் எடுத்துச் சென்றுள்ளார். அவற்றின் விபரங்களையும் வெளியிட மறுத்துள்ளார்.

இந்த நிலையில், தனக்கு வழங்கப்பட்ட அரச பரிசுப்பொருட்களை சட்டவிரோதமாக விற்றதாக இம்ரான் கானை பொதுப்பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்து அந்நாட்டு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 65 ¼ சூரி 9 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: A/L மண் பரிசோதகர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/9934 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: சூரி 12 செவ் 11 இல்<br>உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்: M.Sc .Bio informatics, M.Sc Yoga (India) Yoga Instructor, Fitness Trainee<br>எதிர்பார்ப்பு: படித்தவர்<br>தொ.இ: G/9922 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: சூரி 2 செவ் 5 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L வியாபாரம் சொந்தத்தொழில்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அல்லது உத்தியோகம்<br>தொ.இ: B/9950 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா: 91 சூரி 12 செவ் 8 இல்<br>உயரம்: 5' 1"<br>தகைமை/தொழில்: A/L அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/9924 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: சூரி 4 செவ் 7 இல்<br>உயரம்: 5'7'<br>தகைமை/தொழில் A/L பிரான்ஸ் PR இல்லை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு PR உள்ளவர்கள்<br>தொ.இ: B/9942 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 31 சூரி 4 செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில் B.Sc, M.Sc (Pera) ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச. தனியார் தொழில்<br>தொ.இ: G/9958 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: சூரி 6 செவ் 3 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.Sc(Greenwich), M.Sc (Pera) Senior Software Developer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி சைவபோசணம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/9959 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: சூரி 11 செவ் 7 இல்<br>உயரம்: 5' 1"<br>தகைமை/தொழில்: Biology Computer Science (America) Data & Analytics Consultant -America<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/9976 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனங்களின்...

ளார்.

வாகனங்களை இறக்குமதி செய்வதை நினைத்துப்பார்க்க முடியாது.

இதனால், வாகனங்களின் விலை பெருமளவில் குறைவடையாது.

குறிப்பிடத்தக்களவான வாகனங்களே தற்போது நாட்டில் உள்ளன.

எனினும், குத்தகை கொடுப்பனவுகள் மற்றும் வங்கிவட்டி வீதங்களின் அதிகரிப்பால், வைப்பிலிடுவதற்கும், குத்தகை கொடுப்பனவுக்கு செல்லாதிருக்கவும் மக்கள் முயற்சிக்கின்றனர்.

வாகனங்களின் விலை ஓரளவு குறைவடைந்துள்ளது.

இதனால், தற்போதைய குத்தகை கொடுப்பனவுடன் ஒருவர் வாகனத்தைக் கொள்வனவு செய்வாராயின், அவருக்கு பாரியளவில் பாதகம் ஏற்படலாம்.

ஏனெனில், முன்னர் இருந்த விலைக்கு சமமான விலையே தற்போதுள்ளது.

முன்னதாக, அதிக விலைக்கு வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டதுடன், குறைந்த அளவு வட்டிவீதத்தில் குத்தகை கொடுப்பனவைப் பெற்றனர்.

தற்போது, குறைந்த விலைக்கு வாகனம் உள்ள நிலையில், அதனை அதிக விலைக்குப் பெறுகின்றனர்.

எனவே, இந்த இரண்டும் சமமானதாகும் என்றும், ஒருவருக்கு வாகனத்தைக் கொள்வனவுசெய்ய இதுவே சிறந்த சந்தர்ப்பமாகும் என்றும் வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் நாமல் ஹேவா விதாரண தெரிவித்துள்ளார். (ம-7)

## தீபாவளியன்று...

வெட்டு அமுல்படுத்தப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் ஜனக ரத்நாயக்க இதனை தெரிவித்துள்ளார். (ம-7)

## புதிய முறை...

அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் இரண்டாவது வினாத்தாளை முதலிலும் முதலாவது வினாத்தாளை இரண்டாவதாகவும் வழங்க பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் கடந்த ஆண்டு நேர அட்டவணை சம்பந்தமாக விரிவாக ஆராய்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி நடத்த பரீட்சைகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இரண்டாம் வினாத்தாளுக்கான பரீட்சையைக் காலை 9.30 முதல் 10.45 வரை ஒரு மணி 45 நிமிடங்களும், முதலாம் வினாத்தாளுக்கான பரீட்சையை முற்பகல் 11.15 முதல் மதியம் 12.15 வரை ஒரு மணி நேரமும் நடத்த பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. (ம-7)

## சிறுமியின்...

பிடிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தில் பணியாற்றுபவரே இவ்வாறு வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

15 வயதுச் சிறுமி தனியார் கல்வி நிலையத்துக்கு சென்றுவிட்டு வீடுதிரும்பும் வீதியில் நடந்து சென்றுள்ளார். மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்தவர் சங்கிலியை அபகரித்துவிட்டு சிறுமியை கீழே தள்ளிவிட்டுத் தப்பித்துள்ளார்.

ஊரவர்கள் ஒன்றிணைந்து வழிப்பறி கொள்ளையனை மடக்கிப்பிடித்தனர்.

குறித்தநபர் இலங்கை இராணுவத்தின் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் பணியாற்றும் கொல்லங்கலட்டியை சேர்ந்தவரே இவ்வாறு மக்களினால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பலாலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

அவரிடமிருந்து சங்கிலியும் மீட்கப்பட்டது.

சந்தேக நபரை பொலிஸார் அழைத்துச் சென்ற போது இராணுவத்தினர் தலையீடு செய்ததால் குழப்பநிலை ஏற்பட்டது. எனினும் மக்களின் எதிர்ப்பால் இராணுவத்தினரின் இடையூறு கைவிடப்பட்டது. (ம-7,33,104)

## நட்சத்திர ஹோட்...

என்பது பல நிறுவனங்களில் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டு இவ்வாறான செலவுகளை மேற்கொள்வது பொருத்தமானதல்ல என அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்

ளார். ஆகவே அரச நிறுவனங்களின் செலவுகளை இயன்றவரை மட்டுப்படுத்த வேண்டும் என்றும் அந்த அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார். (ம-7)

## பட்டாசு பொருட்...

ஏற்பட்டுள்ளதாகவும், அதே நேரத்தில் மற்ற பட்டாசுகளின் விலை 300 வரை உயர்ந்துள்ளதாகவும் வியாபாரிகள் கூறுகின்றனர்.

பட்டாசு இறக்குமதிக்கு அதிக வரி விதிப்பதாலும், பட்டாசு உற்பத்திக்கு அதிக செலவாகும் என்பதாலும் பட்டாசுப் பொருட்களின் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பட்டாசு உற்பத்தியாளர்கள் கூறியுள்ளனர்.

இவ்வாறு பட்டாசு பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பட்டாசு விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (ம-7)

## 22ஆவது திருத்தம்...

எனவே அரசியலமைப்புத் திருத்தம் இப்போது 22ஆவது திருத்தம் என்று அழைக்கப்படாமல் 21ஆவது திருத்தம் என்று அழைக்கப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார 21ஆவது திருத்தம் என்று பெயரிடப்பட்ட மற்றொரு திருத்தத்தை சமர்ப்பித்த நிலையில், அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட திருத்தம் 22ஆவது திருத்தம் என்று பெயரிடப்பட்டது.

எனினும் இந்த திருத்தத்தை உயர் நீதிமன்றம் ரத்துச் செய்தது என்றார். (ம-7)

## 4 தமிழ்...

வர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய நால்வரில் இரகுபதி ஷர்மா உள்ளடங்லாக இருவர் ஏற்கனவே தமக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு தொடர்பில் மேன்முறையீடு செய்திருப்பதனால், இது வரை அவர்கள் விடுதலைசெய்யப்படவில்லை.

மேலும் இருவருக்கு புனர்வாழ்வளிக்கப்படவேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதனால் அதுகுறித்த உரிய சட்ட நடைமுறைகளைப் பின்பற்றவேண்டியுள்ளதால் அவர்களது விடுதலையும் தாமதமடைந்துள்ளது.

பலவருடகாலமாக பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஜெபநேசன், இரகுபதி ஷர்மா, இலங்கேஸ்வரன், நவதீபன், ராகுலன், காந்தன், சுதா மற்றும் ஜெபநேசன் ஆகிய 8 அரசியல்கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கியமைக்கு நன்றி தெரிவிப்பதாக கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அவர்கள் எண்மரும் நாளை தீபாவளி தினத்தன்று (24) விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மட்டக்களப்பைச்சேர்ந்த வீரக்குமார் ராகுலன், இராமநாதன் நவதீபன், வவுனியாவைச்சேர்ந்த சக்திவேல் இலங்கேஸ்வரன் மற்றும் மன்னாரைச்சேர்ந்த ஜெபநேசன் பெர்னாண்டோ ஆகிய நால்வரும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் சக்திவேல் இலங்கேஸ்வரன் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் 23 வருடங்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய மூவரும் 15 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் தடுத்துவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### மஹஜன சம்பத

திகதி 2022/10/22
சீட்டிழுப்பு இலக்கம் 4916
ஆங்கில எழுத்து: L
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 1 3 9 7 8 9
தேசிய லொத்தர் சபை

### ஹந்தஹன (HANDAHANA)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.10.22
சீட்டிழுப்பு இலக்கம் 225
வெற்றி இலக்கம்: கும்பம்
வெற்றி இலக்கங்கள்: 01 03 17 60
அதி சுப்பிய: கும்பம்
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 22/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1264
வெற்றி எழுத்து: X
சுப்பர் இலக்கம்: 06
வெற்றி இலக்கங்கள்: 23 61 71 73

### கொவிசெத

திகதி 2022.10.22
சீட்டிழுப்பு இலக்கம் 3158
ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கங்கள்: 05 60 71 74
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2022.10.22
சீட்டிழுப்பு இலக்கம் - 946
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கங்கள்: 13 60 67 72
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 22/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1371
வெற்றி இலக்கங்கள்: கன்னி 2 3 4 2 3 2
தேசிய லொத்தர் சபை

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1717
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2022.10.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,585,380/-
வெற்றி இலக்கங்கள்: 03 11 33 46
ஆங்கில எழுத்து: P

### சனிதா (Shanida)

சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.22
சீட்டிழுப்பு இல : 4052
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,573,980/-
வெற்றி இலக்கங்கள்: 01 07 19 63
ஆங்கில எழுத்து: Z

### வாஜ சம்பத

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 05 09 13 37 70
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1067
வர்ணம் சிவப்பு
திகதி 2022.10.22 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 271,431,971.80
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

### சம்பத்ன வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 538
திகதி 2022-10-22
வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 22 37 42
விதி எண்: 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 13,596,052/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1891
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.10.22
தினம் சனிக்கிழமை
B 28 39 45 54
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,471,380/-

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 5,164,077.40
திகதி 2022-10-22
வெற்றி வாரம் 3603
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள்: 17 18 30 38
சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,469,440/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜ மருத்துவம்

வாதம், பாரிசவாதம், குத்துளைவு,
கரப்பன், கிரந்தி, சொறி, வீக்கம், நோவு,
சளி,தும்மல், பீனிசம், நீரிழிவு, கெர்ப்பவாயு,
நெஞ்சுக்குத்து, நித்திரையின்மை
போன்றவற்றிற்கு சிகிச்சை
பெற்றுக்கொள்ள 076 274 4488
பேரறிஞர் DR.K. பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர் வல்லை வீதி, சங்கானை.
பரம்பரை மருத்துவர் பயிற்சி பெற
தொடர்பு கொள்க (C-5125)



## அமெரிக்க லொத்தர் இலவச விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக
அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசா
இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

வெற்றிகரமாக விசா பெற்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours எனும் Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-4921)

V2 Travels 0768226240 0768226244

## வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகத்தரான கணவன்,
மனைவி மட்டும் தங்குவதற்கு
பொருத்தமான வீடு வாடகைக்கு தேவை.
விரும்புவர்களும் தொடர்பு
கொள்ளவும். (13232)

077 645 3862

## வீட்டுப் பணிப்பெண் தேவை

இரண்டு குழந்தைகளை
பராமரிப்பதற்கு வீட்டில் தங்கியிருந்து
பணி புரியக் கூடிய வீட்டுப்
பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு (13233)

077 030 6881

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)

VISA
• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

## Fridge விற்பனைக்கு

6 வருடங்கள் மட்டும் பாவித்த
Double Door Sisil Fridge நியாய
விலையில் விற்பனைக்குண்டு
விலை : 80,000/=
தொடர்புகளுக்கு (13234)

077 364 0941

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :- காலை 6.00 - மாலை 6.00

(13108)

தொடர்பு

077 911 6983
076 755 8606


# உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய புதிய திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், மக்களின் போஷணை மட்டத்தை மேம்படுத்தவும் மத வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்ட உணவு வங்கிகள் மற்றும் உணவுப் பரிமாற்ற மையங்களை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்மற்றும்மக்களின்போஷணை மட்டத்தை மேம்படுத்துதல் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல், நேற்று உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட தலைமையில் நடைபெற்றது.

புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சினால், சமய ஸ்தலங்களை மையமாகக் கொண்டு இந்த வேலைத்திட்டத்தை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக் கூடாக 14,022 கிராம சேவகர் பிரிவுகளிலும் அமுல்படுத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, குறித்த பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்படும் உணவு பரிமாற்ற மையமானது, அப்பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய தேவைக்கு அதிகமான உணவுகளை சேகரித்து உணவு வங்கிக்கு வழங்கும். பின்னர் அந்த உணவு, உணவு வங்கியூடாக உணவு பற்றாக்குறையுடைய குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படும். (ம-7)


# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

## நீர்க்கசிவுக்கான இரசாயனப் பொருட்கள்

மழைக் காலத்தில் உங்கள் கட்டடங்கள் கூரைகளில்
ஏற்படும் நீர்க்கசிவுகளை எங்களிடம் இரசாயனப்
பொருட்களை பெற்று எமது தொழில்நுட்ப உதவியுடன்
நீங்களே சீர்செய்து கொள்ளலாம்.

FINEX

போலிகளைக் கண்டு ஏமாற வேண்டாம்

உலகத் தரமிக்க இரசாயனப் பொருட்களை
ஏக விநியோகஸ்தர் ஆகிய எம்மிடம் விலைக்கழிவுடன்
பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்த்தர்கள் (13231)

North & East Engineering
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177,
077 232 3000
www.North & East engineering.com

# 1வது பிறந்தநாள் வாழ்த்து

திரு. திருமதி. சிவானந்தன் சுகந்தினி
தம்பதியினரின் செல்வப் புதல்வன்



## அபிஷயன்

இன்று (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை
தனது 1வது பிறந்தநாளை அரியாலையில்
உள்ள தனது அப்பம்மாவின் இல்லத்தில்
வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.
இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு
காலம் வாழ அரியாலை வெட்டுக்குளம்
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை
வேண்டி வாழ்த்துகிறோம்.



வாழ்த்துவோர்
திருமதி. சுசீலாவதி செல்வநாதன்
(அப்பம்மா) குடும்பத்தினர்
திரு.திருமதி.சிவானந்தன் சுகந்தினி
குடும்பத்தினர்

இல.22, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

(13237)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.